திருவாங்கூர் போர்க்களம்

ஆர். எச். நாதன்
எழுதியது

ஜனசக்தி பிரசுராலயம்,
6, டேவிட்ஸன் தெரு,
ஜி. டி., சென்னை.

ஜூலை, 1947] [விலை 6 அணா

முகவுரை

சுதந்திரத்தை விரும்பும் தமிழ் மக்கள் அனைவரின் கவனமும் திருவாங்கூர் சமஸ்தானத்தின்பால் இழுக்கப்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்திய கைப் பாவைகளான சில சமஸ்தானாதிபதிகள் "சுதந்திரம்" கேட்பதைப்பற்றி வெகுண்டெழாத தேசபக்தன் யாரும் இருக்கமாட்டான்.

மன்னர்களுக்கு சுதந்திர தேவியின் மீது இவ்வாறு திடீரென்று காதல் பிறக்க காரணமென்ன? மௌண்ட்பாட்டன் பிரபுவின் திட்டம் என்ன? திருவாங்கூர் திவான் போர்க்கோலம் பூண்டதேன்?

இவற்றிற்கெல்லாம் விடைதேடி, இன்றைய தேசீய அரசியலை சுருங்கச்சொல்லி விளங்கவைக்கிறது இச்சிறு நூல்.

தேசபக்தர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

ஜனசக்தி பிரசுராலயத்தார்

திருவாங்கூர் போர்க்களம்

ஏகாதிபத்தியத்தின் 584 ஐந்தாம் படைகள்

"சுதேச மன்னர்கள் பிரிட்டனுக்கு பெரிதும் விசுவாசமுள்ளவர்கள். அவர்களில் அநேகர், இன்று அரசர்களாக இருப்பதற்கு, பிரிட்டனின் இராணுவமும், நீதியும்தான் காரணம். இன்று தலைதூக்கியிருக்கும் கஷ்டங்களைச் சமாளிப்பதற்கும், எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் சில அரசியல் மாற்றங்களுக்கும் அவர்கள் எஜமான் விசுவாசமும், நட்பும் விலைமதிக்கமுடியாத பொக்கிஷங்கள். இந்த சமஸ்தானங்கள் இந்தியா முழுவதும் குறுக்கு நெடுக்காகப் பரவிக்கிடப்பது நமக்கு மகத்தான பாதுகாப்பாகத் திகழ்கின்றது. எதிரி நாடுகளின் எல்லைப்புறத்தில், சங்கிலி கோர்த்தாற்போல் நமக்கு ஆதரவான கோட்டைகளை அமைத்திருப்பதுபோல் இருக்கின்றன. பலமும், எஜமான் விசுவாசமும் உள்ள சுதேச சமஸ்தானங்கள் இந்தியா முழுவதும் பரவிக்கிடப்பதால், பிரிட்டனுக்கு எதிரிடையாக கலகம் வெடித்தால், அது இந்தியா முழுவதும் பரவுவது கடினம்" என்று வட்ட மேஜை மகாநாட்டில் மன்னர்களுக்கு ஆலோசனை கூறுகிறவராக இருந்த பேராசிரியர் **ரஷ்புருக் வில்லியம்ஸ் 1930**-ம் வருடம் கூறினார்.

மகாத்மா காந்திஜி, நேருஜி ஆகிய மாபெரும் தலைவர்களின் வேண்டுகோளை திருவாங்கூர் திவான் உதாசீனம் செய்கிறார். "யதேச்சாதிகாரத்தை நிலைநாட்டத்தான் செய்வேன், இந்தியக் குடியரசோடு சேரவேமாட்டேன், ஏகாதிபத்தியங்களோடு உறவு வைத்துக்கொள்ளத்தான் செய்வேன். என் விருப்பத்தை யாராவது எதிர்த்தால்......யுத்தம்தான். அதற்கும் தயாராக இருக்கிறேன்" என்று திருவாங்கூர் திவான் யுத்தகோஷம் செய்கிறார்.

சமஸ்தான மக்களும், அகில இந்தியாவும் அவரது சவாலை ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும், அகில இந்திய சமஸ்தான மக்களின் காங்கிரசும் யதேச்சாதிகாரத்தை ஒழித்துக் கட்டத்தான்வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருக்கின்றன.

திருவாங்கூரிலுள்ள சகல கட்சிகளும் போராட்டத்திற்குத் தயாராக இருக்கின்றன.

ஏற்கனவே திருவாங்கூரில் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது. ஜூன் மாதம் 14-ந் தேதியன்று "அரசியல் நிர்ணயசபை தினத்தை"க் கொண்டாடும்படி சமஸ்தான காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்திருந்தது. அன்று திருவாங்கூர் முழுவதும் பொறுப்பாட்சி தினம் கொண்டாடப்பட்டது. பல இடங்களில் தடை உத்திரவுகளை மீறி பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் முதலில் சமஸ்தான மக்கள்மீது போர்தொடுத்துவிட்டார். சமஸ்தான காங்கிரசின் காரியக்கமிட்டி அங்கத்தினர்களில் 5 பேர்களும், காங்கிரஸ் ஊழியர்களில் 100 பேர்களும், 270 தொழிற்சங்க ஊழியர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்வதும், தடியடியும் துப்பாக்கிப்பிரயோகமும் கோர தாண்டமாடுகின்றன. திருவாங்கூரிலுள்ள 43 தொழிற்சங்கங்கள் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளன......

திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அகில இந்தியாவின் விருப்பத்திற்கு எதிரிடையாக, ஏன் 'சுதந்திரப் பிரகடனம்' செய்திருக்கிறார், சமஸ்தான மக்களுக்கோ, அல்லது அகில இந்தியாவுக்கோ சுதந்திரம் கொடுக்கப்போகிறாரா, அந்தரங்க நோக்கமென்ன ?......

இந்தியாவில் 584 சமஸ்தானங்கள் இருக்கின்றன. நமது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு சமஸ்தானங்கள். மொத்த ஜனத்தொகையில் நான்கில் ஒரு பாகத்தினர் சமஸ்தான மக்கள்.

இந்தியாவின் பூகோளபடத்தைப் பாருங்கள். சங்கிலி கோர்த்தாற்போல், குறுக்கும், நெடுக்குமாக இந்தியா முழுவதும் சமஸ்தானங்கள் பரவிக்கிடக்கின்றன. நமது தாயகமான தமிழ்நாட்டையே எடுத்துக்கொள்வோம். ஒரு புறம் வங்காள விரிகுடாக்கடல்; தெற்கேயுள்ள தலைமாட்டிலே இந்தியாவின் மத்தியிலே குறுக்காகக் கிடக்கும் ஹைதராபாத் சமஸ்தானம். மற்ற எல்லைகளிலே திருவாங்கூரும், கொச்சியும், மைசூரும் இருக்கின்றன. இதுமட்டுமல்ல, நமது நெஞ்சில் உட்கார்ந்திருப்பதுபோல், தமிழ்நாட்டின் மத்தியில் புதுக்கோட்டை சமஸ்தானம்.

மற்றொரு முக்கியமான விஷயம். ஏகாதிபத்தியம் இந்த சமஸ்தானங்களின் எல்லைகளை வகுத்திருக்கும் வேடிக்கையையும் கவனியுங்கள். தமிழ்நாட்டின் எல்லையை ஒட்டியிருக்கும் திருவாங்கூரின் பகுதியில் சுமார் 12 லக்ஷம் தமிழர்கள் வசிக்கிறார்கள். இந்தப் பிரதேசத்தை திருவாங்கூர் சமஸ்தானத்தோடு சேர்த்திருக்கிறார்கள். கேரளத்தில் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் மலையாளிகள் இருக்கிறார்கள். ஆனால். திருவாங்கூர், கொச்சி, பிரிட்டிஷ் மலையாளம் என்று மலையாளிகள் துண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதேமாதிரியாகத்தான் கலாச்சாரம், பாஷை ஆகியவைகளை அடிப்படையாகக் கொள்ளாமல், ஒவ்வொரு சமஸ்தானத்தின் எல்லைகளும் ஏகாதிபத்யத்தால் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ராஜாக்களும், மகாராஜாக்களும் யார்? பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, பல நாடுகளிலுள்ள முடிமன்னர்கள் மண்ணோடு மண்ணாய் போய்விட்டார்களே, ஆனால் இந்தியாவில் மாத்திரம் பத்தாம் பசலி நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் சின்னங்கள் ஏன் இன்னும் அழிந்துபோகாமலிருக்கின்றன ?

இரு நூற்றுண்டுகளுக்கு முன்பு இந்தியாவை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் சர்க்கார், சுதேச மன்னர்களை அதிகாரத்திலிருந்து அகற்றி, அவர்கள் பிரதேசங்களைக் கைப்பற்றிவந்தது.

பொதுமக்களை நசுக்கிவந்த உளுத்து இத்துப்போய்க்கொண்டிருக்கும் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் சின்னங்களான சுதேச மன்னர்கள் 1857-ம் வருடத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்தார்கள். பல நூற்றுண்டுகளுக்கு முன்பே யந்திர புரட்சி ஏற்பட்டு, முதலாளித்துவ சமூகத்தின் அஸ்திவாரத்தில் கட்டப்பட்ட பலம் பொருந்திய பிரிட்டிஷ் சர்க்காரை பொது ஜனங்களின் ஆதரவின்றி, இந்தப் பத்தாம் பசலி நிலப் பிரபுத்துவ சக்திகள் முறியடிக்க முடியாமற்போனதில் ஆச்சரியமே கிடையாது!

ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 1857-ம் வருடத்தில் நடந்த "சிப்பாய் கலகத்"திலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டது. வளர்ந்துவரும் பொதுஜன எழுச்சியை நசுக்கித் தேய்க்கவேண்டுமானால், அஸ்திவாரத்தில் ஆட்டம் கொடுத்திருக்கும் பிற்போக்கின் பிரதிநிதிகளான சுதேச மன்னர்களை அழிக்கக்கூடாது, பொதுஜன எழுச்சிக்கு எதிரிடையாகவும், தங்களுக்குச் சாதகமாகவும் அவர்களை ஆதரிக்கவேண்டும், அதிகாரத்தில் வைத்திருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

"சிப்பாய் கலகம் நடப்பதற்கு முன்பே, அயோத்தி சமஸ்தானத்தைக் கைப்பற்ற முயற்சிப்பது, அந்த சமஸ்தானத்தைக் கைப்பற்றுவதால் கிடைக்கும் பலனைவிட பத்து மடங்கு அதிகமாக நாம் பிரிட்டிஷ் சக்தியைச் செலவழிக்கவேண்டும். மேலும், இம்முயற்சி, சிப்பாய்கள் கலகம் செய்வதில் இழுத்துச் செல்லும் ......பொதுஜன எழுச்சி, அல்லது சிப்பாய்களின் கலகம் என்ற வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் அணைகளாக சுதேச சமஸ்தானங்களைக் கருதவேண்டும். சுதேச மன்னர்கள் இல்லையென்றால், நாம் சுதேச ராணுவத்தையே நம்பியிருக்கவேண்டும். சுதேச சிப்பாய்கள் எப்பொழுதும் போதுமான அளவு நமது நிர்வாகத்தின் கீழ் அடங்கியிருக்க மாட்டார்கள், என்று ஸர். வில்லியம் ஸ்லீமான் என்பவர் அப்பொழுது வைஸ்ராயாக இருந்த லார்ட் டெல்ஹௌஸியிடம் கூறினார்." (ரஜனி பாமிதத் எழுதியிருக்கும் "இன்றைய இந்தியா" என்ற புத்தகத்திலிருந்து மேற்கோள்) ஆனால் லார்ட் டெல்ஹௌஸி அப்பொழுது இந்த யோசனைக்குச் செவிசாய்க்கவில்லை. சிப்பாய் கலகத்திற்குப் பின்புதான், சுதேச மன்னர்களைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்திலிருந்த இந்தியாவை, பிரிட்டிஷ் சர்க்கார் நேரடியாக நிர்வாகம் செய்ய ஆரம்பித்த பொழுது, 1858-ம் வருடம் விக்டோரியா மகாராணி தனது பிரகடனத்தில் பின்வருமாறு குறிப்பிட்டாள் :

"சுதேச மன்னர்களின் உரிமைகளையும், கௌரவத்தையும், அந்தஸ்தையும் எங்களது போல் மதிப்போம்"

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு, "இன்று அமுலிலிருக்கும் வெறுக்கத்தக்க ஆங்கிலேய முறையின் கோட்டையாகத் திகழ்கிருர்கள் சுதேச மன்னர்கள். இந்தியாவின் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிருர்கள்' என்று 1853-ம் வருடம், ஜூலை மாதம் 25-ந் தேதி "நியூயார்க் டெய்லி டிரிபியூன்" என்ற பத்திரிகையில் மேற்கூறியவாறு கார்ல் மார்க்ஸ் தீர்க்க தரிசனத்துடன் எழுதினுர்.

இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிரந்தரமாக நிலைநாட்டுவதற்காக, இவ்வாறு இந்தியாவை பிரிட்டிஷ் இந்தியா, மன்னர்கள் இந்தியா இன்று இரண்டாகப் பிரித்தார்கள். இவ்வாறு பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு, அதிகாரமில்லாத இஸ்பேட் அரசர்களை, நமது நாடு சுதந்திரத்தையும், சுபீட்சத்தையும் நோக்கி முன்னேறிச் செல்வதற்கு முட்டுக்கட்டையாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்.

முதல் உலக மகா யுத்தம் முடிந்த பின்பு இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் என்ற சண்டமாருதம் வீசியடித்தபொழுது, சுதந்திர இயக்கத்துக்கு எதிரிடையாக வைஸ்ராயின் தலைமையிலுள்ள நரேந்திர மண்டலத்தை (மன்னர்களின் ஸ்தாபனத்தை) சிருஷ்டித்தது ஏகாதிபத்தியம்.

பின்னர், 1935-ம் வருடத்தில் மாகாண சுயாட்சியைக் கொடுத்து, சமஷ்டித் திட்டத்தில் மன்னர்களுக்கு பிரதிநிதித்வம் கொடுத்து, அவர்களை கேந்திர ஸ்தானங்களில அமர்த்தி, சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் நோக்கி இந்தியாவை முன்னேற விடாமல் தடுக்கச் சூழ்ச்சி செய்தது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்.

1942-ல் இந்தியாவுக்குக் கொடுத்த "கிரிப்ஸ் திட்ட"த்திலும் இந்தியாவின் சுதந்திரத்திற்கு அபாயத்தை விளைவிக்கும் மன்னர்களுக்கு முக்கிய ஸ்தானத்தை அளித்திருந்ததால், அந்தத் திட்டத்தை காங்கிரஸ் நிராகரித்தது.

> "அநேக வழிகளில் சுதந்திரப் பாதையில் இந்தியாவைப் போகவிடாமல் தடுக்கும் முட்டுக்கட்டைகளாக சமஸ்தானங்கள் திகழும். இன்னும் அன்னிய ஆட்சி நடக்கும் பிரதேசங்களாக இருக்கின்றன. அங்கு, அன்னியநாட்டின் படைகள் வைக்கப்படலாம் என்று தெரிகிறது. ஆகவே, சமஸ்தான மக்களதும், மற்ற பகுதியிலுள்ள இந்தியர்களதும் சுதந்திரத்திற்கு நிரந்தரமாக ஆபத்தை விளைவிக்கும்" என்று கூறி கிரிப்ஸ் திட்டத்தை நிராகரித்தது காங்கிரஸ்.

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்தபின்பு, அடிமை நாடுகள் அனைத்தும் போர்க்கொடியை உயர்த்தின. இதுவரையிலும் நாம் கண்டும் கேட்டுமிராத அளவு இந்தியாவிலும் சுதந்திரப் போராட்டம் நடந்தது. கடற்படை மாலுமிகளும், தரைப் படையும், விமானப் படையும், போலீசும், தொழிலாளர்களும்,

விவசாயிகளும், குமாஸ்தாக்களும், ஆசிரியர்களும் போர்க்களத்தில் குதித்தார்கள். இனிமேல் நேரடியாக இந்தியாவை ஆட்சிபுரியமுடியாது என்ற நிலைமை ஏற்படவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மந்திரிகளின் தூதுகோஷ்டி இந்தியாவுக்கு வந்து, ஒரு அரசியல் திட்டத்தைக் கொடுத்தது. இந்தியாவுக்குப் பரிபூரணமாக சுதந்திரம் கொடுத்துவிட்டதாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பறைசாற்றிற்று.

ஆனால், பிரிட்டிஷ் மந்திரிகளின் தூதுகோஷ்டியின் திட்டத்திலும் பழைய பிரித்தாளும் சூழ்ச்சியும் சமஸ்தான மன்னர்களைத் தங்கள் ஐந்தாம் படைகளாக உபயோகித்துக்கொள்ளும் தந்திரமும் அடங்கியிருந்தன. அதாவது, ஹிந்துஸ்தான், பாக்கிஸ்தான், மன்னர்ஸ்தான் என்று இந்தியாவை மூன்று துண்டுகளாகப் பிரித்ததோடு, பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவை விட்டு வெளியேறும்பொழுது சமஸ்தானங்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்படும் என்று தூதுகோஷ்டியின் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்திய யூனியன் அரசியல் நிர்ணய சபையில் சமஸ்தானங்களுக்கு 93 ஸ்தானங்களைக் கொடுத்து, சுதந்திர - ஜனநாயகப் பாதையில் அரசியல் நிர்ணய சபையைச் செல்லவிடாமல் தடுக்க சுதேச மன்னர்களைப் பயன்படுத்திக்கொள்ளச் சூழ்ச்சி செய்யப்பட்டிருந்தது.

மௌண்ட்பேட்டனின் திட்டமும் சமஸ்தானங்கள் விரும்பினால் இந்திய யூனியனோடு சேர்ந்துகொள்ளலாம், விரும்பவில்லையென்றால் தனியே சுதந்திரமாக வாழலாம் என்ற தூதுகோஷ்டியின் திட்டத்தை ஊர்ஜிதம் செய்திருக்கிறது. அதாவது, சமஸ்தான மன்னர்களை எதிர்த்துப் போராடிவந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், 1858-ம் வருடத்திற்குபிறகு, அவர்களை எந்தக் காரணத்திற்காக ஆதரித்துவந்ததோ, அதே காரணத்திற்காக இப்பொழுதும் அவர்களுக்கு "சுதந்திரத்தை" வழங்கியிருக்கிறது.

"நட்பும், எஜமான் விசுவாசமும்" உள்ள சுதேச மன்னர்களில் சிலரை அரசியல் நிர்ணய சபையில் சேரும்படிசெய்து, சுதந்திர இந்தியக் குடியரசில்' பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஐந்தாம்படைகளாக அவர்களை வேலைசெய்யச்செய்வது; மற்றொருபுறத்தில், திருவாங்கூர், ஹைதராபாத், காஷ்மீர் முதலிய பெரிய ராணுவ, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சமஸ்தானங்களை "சுதந்திரப் பிரகடனம்" செய்யச்சொல்லி, அவைகளை தங்களுடைய எதிர்கால ராணுவ, பொருளாதார தளங்களாக மாற்றுவது என்பதுதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அந்தரங்க நோக்கம். "நட்பும், எஜமான் விசுவாசமும்" உள்ள சுதேச மன்னர்கள் "எஜமானின்" உத்தரவை அப்படியே செய்துமுடிக்கிறார்கள். சில குட்டி ராஜாக்கள் அரசியல் நிர்ணய சபையில் சேருவதாக முடிவு செய்திருக்கிறார்கள். அதே சமயத்திலே, திருவாங்கூர், ஹைதராபாத், போபால், காஷ்மீர்பொன்ற பெரிய சமஸ்தானங்கள், சுதந்திரப் பிரகடனம் செய்துவிட்டன,

சுருங்கச்சொன்னால், பாதி இந்தியா அடிமையாகவும், பாதி இந்தியா சுதந்திரமாகவும் இருக்கும் என்பதோடு, தாங்கள் சிருஷ்டித்திருக்கும் ஏகாதிபத்தியத்தின் 584 ஐந்தாம்படை குகை களிலே ராணுவ, பொருளாதார ஆதிக்கத்தை நிலைநாட்டி சுதந்திர இந்தியாவின் சுதந்திரத்திற்கு பேராபத்தை விளைவிக்கப்போகிறார்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும், யதேச்சாதிகார மன்னர்களும். இதுமட்டுமல்ல, சிலோன், பர்மா, மலேயா, இந்தோனேஷியா முதலிய ஆசியாவிலுள்ள நாடுகளை அடிமைப்படுத்துவதற்கும், மூன்றாவது உலக மகா யுத்தத்திற்கும் மன்னர்ஸ்தானை பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளத் திட்டம் போட்டிருக்கின்றன. "1948-ம் வருடம் ஜூன் மாதத்தில், பிரிட்டிஷ் துருப்புகள் இந்தியா முழுவதிலிருந்து வாபஸ் வாங்கவேண்டிய அவசியமே கிடையாது............உதாரணமாக, காஷ்மீர மன்னன் பலமான பிரிட்டிஷ் படையை அவரது சமஸ்தானத்தில் வைத்துக்கொள்ளலாம்........." என்று லண்டனிலுள்ள "டெய்லி டெலிகிராபிக்" என்ற பத்திரிகை எழுதுகிறது.

ஆகவே, "சுதந்திரத்தை"ப் பெறப்போகும் மன்னர்ஸ்தான் ஏகாதிபத்தியத்தின் ஐந்தாம்படைக் குகைக்களாகத் திகழப்போகின்றன.

சுதந்திர கோஷமா, யுத்த கோஷமா ?

"சுதந்திர இந்தியாவில் இந்திய மன்னர்களின் சார்பாக சுதந்திரப் பிரகடனம் செய்வதில் அர்த்தமிருக்கிறது என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. இவ்வாறு சுதந்திரப் பிரகடனம் செய்வது, கோடிக்கணக்கான சுதந்திர இந்தியர்கள் மீது யுத்தப் பிரகடனம் செய்வதற்குச் சமம்" என்று ஜூன் மாதம் 15-ந் தேதியன்று டில்லியில் பிரார்த்தனையின்போது காந்திஜி கூறினார்.

சுதேச மன்னர்களுக்கு அதிகாரமே கிடையாது; இஸ்பேட் ராஜாக்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆட்டிவைக்கும் கைப்பாவைகளாக இருந்தார்கள். மேல் அதிகாரத்தின் மூலமாக (Paramountcy) சமஸ்தானங்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே நிர்வாகம் செய்துவந்தது. பொதுமக்களின் நலனைப் பற்றி அணுவளவேனும் கவலைப்படாமல், விளையாட்டிலும், குதிரைப் பந்தயத்திலும், கோமாளிகளைப்போல் ஆடையணிவதிலும், குடிப்பதிலும் இன்னும் பல விதமான சுக போகங்களில் மூழ்கிக் கிடந்த இஸ்பேட் ராஜாக்கள் "சுதந்திரம் வேண்டும், இந்திய யூனியனின் அரசியல் நிர்ணயசபையில் சேரமாட்டோம், சுதந்திர இந்தியக் குடியரசோடு சேரமாட்டோம்" என்று திடீரென ஓலமிடுவதன் அந்தரங்க நோக்கமென்ன? இவர்கள் யாருக்குச் சுதந்திரம் கேட்கிறார்கள்?

திருவாங்கூர், ஹைதராபாத் முதலிய சமஸ்தானங்கள் "சுதந்திர"ப் பிரகடனம் செய்த பொழுது, தேசியத் தலைவர்கள் "அரசியல் நிர்ணய சபையில் சேரவேண்டும், இந்தியக் குடியரசில் சேரவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளோ, யதேச்சாதிகார மன்னர்களின் "சுதந்திர"ப் பிரகடனத்தைக் கொட்டுமுழக்கத்துடன் வரவேற்றார்கள்.

" இந்திய சமஸ்தானங்கள் சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்கார் முன்பு பின்பற்றிய கொள்கையை கைவிடப்போவதில்லை. இந்தியாவிலுள்ள எந்த சர்க்காரிடமும், சமஸ்தானங்களை நிர்வாகம் செய்யும் அதிகாரத்தைக் கொடுக்கப்போவதில்லை......பிரிட்டிஷ் சர்க்கார் மேல் அதிகாரத்தை ரத்துசெய்த பின்பு, சமஸ்தானங்களோடு புதிதாக உடன்படிக்கை செய்துகொள்ளாது என்று சொல்லமுடியாது........." என்று ஏகாதிப்த்தியத்தின் செய்திஸ்தாபனமான "ராய்ட்டரின்" அரசியல் நிருபர் 1947-ம் வருடம் ஜுன் 2-ந் தேதி பச்சையாகப் பேசினார்.

இதுமட்டுமல்ல, பல மாதங்களுக்கு முன்பு, மார்ச்சு மாதம் 25-ந் தேதியன்று ஏ. பி. ஏ. செய்தி ஸ்தாபனத்தின் லண்டன் நிருபர் கீழ்க்கண்ட விவரத்தைத் தெரிவித்தார்:

> சில சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் லண்டனில் பிரிட்டிஷ் துருப்புகளை சமஸ்தானங்களில் வைத்திருக்க பேரம்பேசி வருகிறார்கள். மேலும், பெரிய அமெரிக்க ராணுவ உத்தியோகஸ்தர்களோடும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்......
>
> கடற்கரை ஓரமாக உள்ள சில சமஸ்தானங்களை சாம்ராஜ்யத்தை பாதுகாப்பதற்காக ஆஸ்திரேலியாவோடு சேர்ந்துகொண்டு பிரிட்டனும், அமெரிக்காவும் உபயோகப்படுத்திக்கொள்ளப்போவதாக வதந்தி உலாவுகிறது.

"நம்முடைய கோரிக்கைகளை ஈடு செய்வதற்கு சமஸ்தானங்கள் தவறியதே இல்லை. அவை எப்பொழுதுமே நமக்கு உதவத் தயாராக இருந்தன. பெரும்பாலான சமயங்களில் நாம் கேட்பதற்கு முனபே அவர்கள் தாங்களாகவே உதவி செய்ய முன்வந்தனர்" என்று இந்திய தளபதி ஆக்கின்லக் கூறுகிறார்.

இவை ஏகாதிபத்தியங்களின் குரல். சந்தேகத்திற்கு இடமே கொடுக்காமல், அதே குரலை பல யதேச்சாதிகார மன்னர்களும் எதிரொலித்தார்கள்.

"ஒரு சுதந்திர நாடு என்ற நிலையில், பொருளாதார ராணுவ கலாச்சார உறவுகளை இந்தியாவிலுள்ள மற்ற பகுதிகளோடு

மாத்திரமல்ல, "அன்னிய நாடுகளோடும் வைத்துக்கொள்வோம்" என்று ஹைதராபாத் சமஸ்தானத்தின் பிரதிநிதி கூறினர்.

இப்பொழுது யுத்த கோஷம் செய்யும் திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், "திருவாங்கூர் சமஸ்தானத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக, இந்தியாவிலுள்ள பக்கத்து நாடுகளோடு மாத்திரமல்ல, அன்னிய நாடுகளோடும் உடன்படிக்கை செய்துகொள்வோம்" என்று மார்ச்சு மாதம் 3-ந் தேதியன்று கூறினர்.

இந்திய யூனியனேடு சேருவதென்றால் வேப்பங்காய்போல் கசக்கிறது. ஆனல், ஏகாதிபத்தியங்களோடு உறவு வைத்துக் கொள்வது அமிர்தம்போல் ருசியாக இருக்கிறது. காரணமென்ன?

சுதேச சமஸ்தானங்களை பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் ராணுவ, பொருளாதார தளமாக மாற்றுவதற்கு திட்டம் போட்டிருக்கிருர்கள். இதற்காகவே "சுதந்திரமும்", கேட்கிருர்கள்.

பல சமஸ்தானங்கள் தலை தெறிக்கும் வேகத்தில் ராணுவ பலத்தைப் பெருக்கிவருகின்றன. சமீபத்தில் டெல்லியில் கூடிய அகில இந்திய சமஸ்தான மக்களின் காங்கிரசின் நிர்வாகக் கமிட்டி, "பல சமஸ்தானங்கள் ராணுவத்தை அதிகரித்து வருவதாகவும், ஆயுதங்களைத் திருட்டுத்தனமாக கடத்திவருவதாகவும் நிர்வாகக் கமிட்டிக்கு தகவல்கள் வந்து குவிகின்றன. இதன் அர்த்தமென்ன? சமஸ்தானங்கள் ரகசியமாக ஏதோ திட்டங்களை வகுத்திருக்கின்றன. அந்தத் திட்டத்தை, சமஸ்தான மக்கள் மீது ஆயுத பலத்தின் மூலமாகத் திணிக்கவிரும்புகிருர்கள். சட்டத்திற்கு விரோதமாக, சமஸ்தானங்கள் ராணுவத்தை அதிகரித்து வருகின்றன, ஆயுதங்களைத் திருட்டுத்தனமாகக் கடத்தி வருகின்றன என்ற உண்மையை இந்திய சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிரேம். சமஸ்தான மக்களும் உஷாராக இருக்கவேண்டும்" என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

சமஸ்தானத்தில் நடக்கும் ராணுவ முஸ்தீப்புகளுக்கு சில உதாரணங்களைக் கொடுக்கிரேம்.

● காஷ்மீரம் சோவியத் யூனியனின் எல்லையிலும், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பாஞ்சாலம் ஆகிய மாகாணங்களின் எல்லைப்புறங்களிலும் இருக்கிறது. சோவியத் யூனியனின் எல்லையிலுள்ள கில்ஜிட் என்ற பிரதேசத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீநகரில் விமானதளம் அமைக்கப்பட்டிருக்கிறது.

● ஹைதராபாத்தில், யுத்தகாலத்தில் ஒரு லக்ஷம் சிப்பாய்கள் இருந்தார்கள். யுத்தம் முடிந்த பிறகு, ராணுவத்தைக் கலைக்காமல், இன்னும் அதிகரித்துவருகிருர்கள். பிரிட்டிஷ்

ஏகாதிபத்தியத்தின் நேரடியான ஆதிக்கத்திலிருந்த செக்கந்தரா பாத் கண்டோன்மெண்டிலும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள காமரெட்டி என்ற இடத்திலும் தினே தினே பிரிட்டிஷ் துருப்புகளைப் பெருக்கிவருகிறார்கள்.

● அணுகுண்டை உற்பத்தி செய்வதற்குவேண்டிய தோரியம் என்ற மூலப்பொருள் திருவாங்கூரில் இருக்கிறது. இந்த மூலப்பொருளை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு திருவாங்கூர் கொடுத்துவந்தது. தோரியத்தை விற்பது சம்பந்தமாக இப்பொழுது ஒரு பிரிட்டிஷ் கம்பெனியோடு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறது. ஆதிக்க வேட்டைக்காக, அணுகுண்டை உபயோகிக்க விரும்பும் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் தோரியத்தை திருவாங்கூர் ஏன் கொடுக்கிறது ?

● பல சமஸ்தானங்கள் புதிதாக விமான தளங்களையும் முக்கியமான கேந்திரஸ்தானங்களை இணைப்பதற்காக ரஸ்தாவையும், ரெயில்வேயையும் அமைத்துவருகின்றன.

● ஏற்கனவே, ஜாம் நகரிலுள்ள சிகா என்ற துறைமுகத்தையும், ஜுனகாத் சமஸ்தானத்திலுள்ள வெரவால் துறைமுகத்தையும் கடற்படைத் தளமாக மாற்றிவருகிறார்கள். விசாகபட்டணம் துறைமுகத்தை ஹைதராபாதும், பம்பாய் மாகாணத்திலுள்ள பட்கால் துறைமுகத்தை மைசூரும் கேட்கின்றன.

இதுமட்டுமல்ல. சுதேச சமஸ்தானங்களை பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் பொருளாதார தளமாகவும் மாற்றி வருகிறார்கள்.

மன்னர்களின் நரேந்திரமண்டலத்தின் காரியதரிசி மக்புல் மஹமத் "ஏஷியாடிக் ரெவ்யூ" என்ற பத்திரிகையில் "இந்தியாவும், பிரிட்டனும் ஒன்றுசேர்ந்து சமஸ்தானங்களில் தொழிற்சாலைகளை அபிவிருத்திசெய்ய வசதியிருக்கிறது" என்று எழுதினார். ஏற்கனவே, ஹைதராபாத், திருவாங்கூர்போன்ற சமஸ்தானங்கள் இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கின்றன.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு திருவாங்கூரும், ஹைதராபாதும் நேரடியாக தொடர்புவைத்துக்கொண்டிருக்கின்றன. நேபாளம், ஏற்கனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு உடன்படிக்கை செய்துகொண்டிருப்பதோடு, பிரிட்டிஷ் ராணுவத்திற்கு கூர்க்கர்களைக் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறது.

சுருங்கச்சொன்னல், ராணுவத்தைப் பெருக்கி, விமான தளங்களையும், கடற்படை தளங்களையும் புதிதாக அமைத்து, பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களோடு உறவுவைத்துக் கொள்வதற்காகத்தான் "சுதந்திரம்" கேட்கிருர்கள், ஏனென்

ருல், நமது சுதந்திர, ஜனநாயகக் குடியரசின் லட்சியம், இந்தியாவில் ஏகாதிபத்தியங்களின் ராணுவ, பொருளாதார ஆதிக்கம் இம்மியளவேனும் இருக்கக்கூடாது என்பதுதான். இந்தியக் குடியரசில் சேர்ந்தால் ஏகாதிபத்தியங்களின் ஐந்தாம்படைகளாகத் திகழவேமுடியாது. இந்தியக் குடியரசில் சேர்ந்தால் யதேச்சாதிகார ஆட்சியைத் தொடர்ந்து நடத்தமுடியாது. ஆகவே, சமஸ்தானங்கள் சுதந்திரப் பிரகடனம் செய்வதன்மூலமாக, நன்மை யடையப்போவது யார்? யதேச்சாதிகார மன்னர்களும், சமஸ்தான மக்களைச் சுரண்டிக் கொழுக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில பணமூட்டைகளும், பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியங்களும்தான்!

ஆனால், சமஸ்தானங்கள் சுதந்திரப் பிரகடனம் செய்வதன் மூலமாக சமஸ்தான மக்களுக்கும், சுதந்திர இந்தியாவுக்கும், நமது தேசிய இயக்கத்திற்கும், ஆசியாவிலுள்ள நாடுகளுக்கும் பேராபத்தை விளைவிக்கப் போகிறார்கள்.

ஏப்ரல் மாதம் 19ந் தேதி குவாலியரில் நடந்த அகில இந்திய சமஸ்தான மக்களின் மகாநாட்டில் சமஸ்தானங்களின் படுமோசமான நிலைமையைப்பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில், எந்த சமஸ்தானத்திலும் ஜனநாயக சாக்காரை அமைக்கவில்லையென்றும், சில சமஸ்தானங்கள் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கும் அரசியல் சீர்திருத்தங்களுக்கும், ஜனநாயகத்திற்கும் சம்பந்தமே கிடையாதென்றும், கொடிய அடக்குமுறை கோரத்தாண்டவமாடுகிற தென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. சுதேச ராணுவத்தை பெருக்குவதோடும், ஏகாதிபத்திய படைகளுக்கு தத்தம் சமஸ்தானங்களில் இடமளிப்பதன் மூலமாகவும் சமஸ்தான மக்களுக்கு என்ன கிடைக்கப் போகிறது? சுதந்திரமும், ஜனநாயகமும், சுபீட்சமும் அல்ல; வறுமையும், பிணியும், சிறையும், குண்டுகளும்தான். சமஸ்தானங்களில் நடக்கும் பொறுப்பாட்சி இயக்கத்தை மேலும் மிருகத்தனமாக நசுக்குவார்கள்.

சமஸ்தான மன்னர்கள் "சுதந்திரம்" பெறுவதால் நமது தேசிய இயக்கத்திற்கு என்ன கிடைக்கப்போகிறது? நமது தேசிய இயக்கத்தைச் சிதறடிப்பதற்காகவே சுதேச மன்னர்களை ராஜ பதவியில் வைத்திருந்தது பிரிட்டிஷ் ஏகாதிபத்யம். கடந்த ஒரு நூற்றாண்டாக ஐந்தாம்படை வேலையைத் திறமையாகச் செய்து வந்திருக்கிறார்கள்.

நமது நாட்டில் நிரந்தரமாகத் தங்கியிருப்பதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் வகுப்புக் கலவரத்தை தூண்டிவிடுகிறது. வகுப்புக் கலகத்தை தூண்டிவிடுவதில் இந்த ஐந்தாம் படைகளும் முக்கிய பங்கெடுத்துக்கொள்கிறார்கள்.

"பாஞ்சாலத்தில் சீக்கிய மன்னர்கள் வகுப்புக் கலவரத்தை தூண்டிவிட, பகிரங்கமாக உதவிபுரிந்து வருவதாகத் தெரி

கிறது. லாகூரில் மே மாதம் 18ந் தேதி மிகப்பெரிய வகுப்புக் கலகம் நடந்தது. அதில் ஒரு மன்னனுக்குச் சொந்தமான ஜீப்புகளும், டிரக்குகளும் பங்கெடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. வகுப்புச்சண்டை நடந்தபிறகு லாகூரிலுள்ள ஒரு மன்னனின் வீட்டை ராணுவம் சோதனை போட்டபொழுது, பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டார்கள்" என்று "பீப்பிள்ஸ் ஏஜில்" ஜூன் 1ந் தேதி ரோமேஷ் சந்திரா குறிப்பிட்டார்.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் வாரங்கல் என்ற இடத்தில் இப்பொழுது வகுப்புக் கலகத்தை யதேச்சாதிகாரம் தூண்டி விட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் இந்தியாவிலே வீசியடிக்கும் சுதந்திரப் புயல், பக்கத்திலுள்ள சமஸ்தானங்களிலுள்ள மக்களையும் தட்டியெழுப்பாமலிருக்குமா? ஆகவே, தங்கள் யதேச்சாதிகார ஆட்சியை நிலைநாட்டுவதற்காக, சுதந்திர இயக்கம் தங்கள் சமஸ்தானத்தில் பரவாமலிருப்பதற்காக பிரிட்டிஷ் இந்தியாவில் நடக்கும் சுதந்திரப் போராட்டத்தைச் சிதறடித்து, தேசீய ஒற்றுமையைப் பிளவுபடுத்தி வருகிறார்கள்.

மேலும், நமது சுதந்திரத்திற்கும் அவர்கள் நிரந்தரமாக அபாயத்தை விளைவிப்பார்கள். பரந்த இந்தியாவில் 584 சமஸ்தானங்கள் தீவுகளைப்போல் நடுவில் இருக்கின்றன. உதாரணமாக புதுக்கோட்டை சமஸ்தானத்தைப் பாருங்கள். தமிழ்க் குடியரசின் மத்தியில் சுண்டைக்காய்போல் திகழ்கிறது. கோடிக் கணக்கான தமிழர்கள் சுதந்திரமாக வாழும்பொழுது, மத்தியிலுள்ள சில லட்சம் பேர்கள் மாத்திரம் அடிமைகளாக வாழ்வார்களா? ஆகவே, யதேச்சாதிகார மன்னர்கள் எப்பொழுதும் நமது சுதந்திர இயக்கத்திற்கு பரமவைரிகளாகவே இருப்பார்கள்.

மன்னர்கள் சுதந்திரப்பிரகடனம் செய்திருப்பது, கோடானு கோடி சுதந்திர இந்தியர்கள்மீது விடுத்திருக்கும் யுத்தப்பிரகடனம் என்று மகாத்மாகாந்திஜி கூறுகிறார். சில சமஸ்தான மன்னர்கள் ஆக்கிரமிப்பு கோஷத்தைக் கோஷிக்கிறார்கள்.

உதாரணமாக, வடமேற்கு எல்லைப்புறத்திலுள்ள காலாட் மன்னன் முன்பு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குக் கொடுத்திருக்கும் பகுதிகளை—குவெட்டாவைச் சுற்றியிருக்கும் பிரதேசம், போஸ்டான், நுஷ்கி, நாஸிராபாத் ஆகியவைகளை—திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்.

ஹைதராபாத் மன்னனோ பீரார், ஒரிஸாவிலுள்ள கொராபட் ஜில்லா, போர்த்துகீசிய இந்தியாவிலுள்ள கோவாவில் சில பகுதிகள், விசாகப்பட்டணம் முதலியன வேண்டுமென்று கோருகிறார். மைசூர் மன்னன், பட்கால் துறைமுகம் வேண்டுமென்று கேட்கிறார்.

இவர்கள் ஏன் சுதந்திரம் கேட்கிருர்கள்; ஏன் ராணுவத்தை அதிகரிக்கிருர்கள்? ஏன் ஏகாதிபத்தியங்களோடு உடன்படிக்கை செய்து கொள்கிருர்கள்? எதிர்காலத்தில் சுதந்திர இந்தியாவை ஆக்கிரமிப்பதற்காகத்தானே?

சுதேச மன்னர்கள் சுதந்திரமடைவதால் ஆசியாவிலுள்ள மக்களுக்கும், உலக சமாதானத்திற்கும் என்ன நன்மை கிடைக்கப்போகிறது? ஏகாதிபத்திய நாடுகள், யதேச்சாதிகார மன்னர்கள் "சுதந்திர"மாகத் திகழவேண்டுமென்று ஏன் துடிதுடிக்கிருர்கள்?

இந்தியாவைக் கூறுபோடும் திட்டத்தை ஏற்கனவே வகுத்த ஏகாதிபத்தியப் பண்டிதர் கூப்லந்து, "இந்திய அரசியல் திட்டப் பிரச்சினை" என்ற புத்தகத்தில் பின்வருமாறு ஏகாதிபத்தியத்தின் அந்தரங்க நோக்கத்தை விவரிக்கிருர்:

> "ஒரு பிரிட்டிஷ் விமானப் படையை வைத்திருந்தால், ஒரு சிறிய பிரிட்டிஷ் தரைப்படையைக் கொடுத்தாலே போதும். சமஸ்தாளுதிபதிகள் திருப்தியடைந்துவிடுவார்கள். ராணுவரீதியாகப் பார்த்தால், அவ்வித ஏற்பாடு பிரிட்டிஷாரால் விரும்பத்தகாதது அல்ல. இந்தியாவின் நடுமையத்தில் பல விமான தளங்களை ஏற்படுத்தி, அவைகளில் பிரிட்டிஷ் விமானிகளை நிறுத்திவைத்திருந்தால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ராணுவப் பாதுகாப்பிற்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்."

ஆம், ஏகாதிபத்திய சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க இந்திய சமஸ்தானங்களைப் பயன்படுத்திக்கொள்ள திட்டம் போட்டிருக்கிருர்கள். காஷ்மீரம் ஸோவியத் யூனியனின் எல்லையில் இருக்கிறது. ஸோவியத் யூனியன்மீது போர் தொடுத்தால், அது முக்கியமான ராணுவ தளமாக உபயோகப்படும். திருவாங்கூர், கொச்சி முதலிய சமஸ்தானங்கள் கடற்கரையில் இருக்கின்றன. சிலோன், பர்மா, மலேயா, இந்தோ சைஞ முதலிய நாடுகளுக்கு கடல் வழியாகப்போகும் பாதையில் இருக்கின்றன. அந்த நாடுகளின் சுதந்திர இயக்கத்தை நசுக்க இவைகளை ராணுவ தளங்களாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆகவே, மன்னர்களின் "சுதந்திரம்" சுதந்திர இந்தியாவுக்கு மாத்திரமல்ல, ஆசியாவிலுள்ள நாடுகளின் சுதந்திரத்திற்கும் உலைவைக்கப் போகிறது. இந்த ஐந்தாம்படைக் குகைகளில் முக்கியமான சமஸ்தானமாகத் திகழும் திருவாங்கூரில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

திருவாங்கூரில் நடப்பதென்ன ?

"பிரிட்டிஷ் சர்க்காரின் குழந்தைகளும், சொந்த நலனை உத்தேசித்து அவர்களாலேயே பால்கொடுத்து வளர்க்கப்பட்டவர்களும், அழுகி அழிந்துபோய்க்கொண்டிருப்பவர்களுமான இந்த சமஸ்தானங்கள் நமது மக்களை அடைத்துப் பூட்டியிருக்கும் சிறைக்கூடங்களாக இருக்கின்றன. அங்கு மனித உணர்ச்சி அழிக்கப்படுகின்றது. பொதுமக்களின் சக்தி அனைத்தும், தர்பார்களின் டாம்பீகத்திற்காகவும், கேளிக்கைகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன. அதே சமயத்தில், பொதுமக்கள் வறுமையிலும், அறியாமையிலும், பிற்போக்குப் படுகுழியிலும் அமிழ்த்தப்பட்டிருக்கிறார்கள்" என்று 1939-ம் வருடம் லூதியானாவில் நடந்த அகில இந்திய சமஸ்தான மக்களின் மகாநாட்டில் சமஸ்தானங்களைப்பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு கூறினார்.

திருவாங்கூர் சமஸ்தானம் தினசரி பத்திரிகைகளில் அடிபடும் சமஸ்தானம். திருவாங்கூர் திவான் ஸர் ஸி.பி. ராமஸ்வாமி ஐயர் சொந்த சமஸ்தானத்தைப்பற்றிய விஷயங்களோடு, தேசீய, சர்வதேசீய அரசியல் விவகாரங்களிலிருந்து, புராண இதிகாசங்கள்வரையிலும் தமக்குச் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, இல்லையானாலும் சரி, தினசரி அறிக்கைமேல் அறிக்கைகளை விட்டுக்கொண்டேயிருப்பார். தனது திறமையை விளம்பரப்படுத்திக்கொள்வதற்காகவும், தனது சமஸ்தானத்தின் மகிமையைப் பிரச்சாரம் செய்வதற்காகவும் அவரே பல பத்திரிகைகளைச் சொந்தமாக நடத்துகிறாரா என்ற சந்தேகம் ஏற்பட்டால் அதில் ஆச்சரியமே இல்லை! ஏனென்றால், பல பத்திரிகைகளில் திருவாங்கூரைப் பற்றியும், திவானைப்பற்றியும் புகழ்மாலை பாடுவதைவிட வேறு எதையும் எதிர்பார்க்கவே முடியாது. உதாரணமாக, சென்ற வருடம் சேர்த்தலையிலும், அம்பலப்புழையிலும் கொடிய அடக்குமுறை கோரதாண்டவமாடியபொழுது, வயலாறில் மாத்திரம் 200 பேருக்குமேல் சுட்டு வீழ்த்தப்பட்டபொழுது, நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டபொழுது, அதைக் கண்டித்து அநேகமாக ஒரு பத்திரிகையும் ஒரு வரிகூட எழுதவில்லை. திவான் ஸர் ஸி. பி.யின் அறிக்கைகளை வேதவாக்காக நம்பின.

ஆனால், இப்பொழுது ஜனநாயகக் குரல் எழுப்பப்படுகிறது. "நேஷனல் ஹெரால்ட்" பத்திரிகை, திருவாங்கூரில் நடக்கும் உண்மையான தகவல்களுக்கு எப்படி இருட்டடிப்புச் செய்யப்பட்டது என்பதை ஜூன் 22-ந் தேதியன்று பின்வருமாறு ஒரு உப தலையங்கத்தில் எழுதுகிறது:

"அஸோஸியேடட் பிரஸ் ஆப் இந்தியா என்ற செய்தி ஸ்தாபனத்திற்கு ஒரு சிறிய யோசனையைக் கூற விரும்புகிறோம். பல வருடங்களாக ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயரின் கதை

களையே இடைவிடாது கேட்டுவந்திருக்கிறோமே தவிர, திருவாங்கூர் சமஸ்தான மக்களின் நடவடிக்கைகளைப்பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்டதில்லை. திருவாங்கூரைச் சுற்றி எவ்வளவு பலமான கோட்டை கட்டப்பட்டிருக்கிறது என்ற உண்மை அடக்குமுறைக்குப் பலியான சமஸ்தான ஊழியர்களுக்குத்தான் தெரியும்.........குற்றம் குறைகளைப்பற்றி மூச்சுவிட்டாலே போதும், அது ராஜத்துவேஷமாகக் கருதப்பட்டது. யார் யார் தன்னை ஆதரிக்கவில்லையோ அவர்கள் தனது எதிரிகள் என்று இப்பொழுது திவான் பகிரங்கமாகப் பிரகடனம் செய்திருக்கிறார். அவருக்கு எதிரிடையாக இருப்பவர்களின் கதி என்னவாகும் என்பது எங்களுக்குத் தெரியும். சமஸ்தான காங்கிரசின் தலைவர் ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளை டில்லியிலிருந்து தைரியமாக சவால் விடுத்திருக்கிறார். விரைவில் விட்டுக்கொடுக்காமல் வரட்டுப் பிடிவாதம் செய்யும் யதேச்சாதிகாரத்திற்கும், அதை எதிர்த்து வளர்ந்துவரும் இயக்கத்திற்கும் இடையே கடுமையான போராட்டத்தை நாம் எதிர்பார்க்கலாம். ஒருபுறத்திலே, திவான் வாயிலிருந்து கக்கப்படும் அபத்தக் களஞ்சியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சமஸ்தான மக்களின் போராட்டத்தைப்பற்றி தாமாகவோ, அல்லது பலவந்தமாகவோ ஒரு வார்த்தையைக்கூட எ. பி. ஐ. செய்திஸ்தாபனம் தெரிவிக்காமலிருப்பதைக் கண்டு இந்தியப் பத்திரிகைகள் திருப்தியடைந்து வாளாவிருக்கமுடியாது. நமது பிரதான செய்தி ஸ்தாபனம் தனது கொள்கையை மாற்றிக்கொள்ளும் என்றும், அவசியமாக இருந்தால் அதன் நிருபரை மாற்றும் என்றும், திருவனந்தபுரத்திலுள்ள அதன் கிளை ஸதாபனத்தை மஹாராஜாவின் அரண்மனையின் ஒரு பாகமாகக் கருதாமலிருக்குமென நாம் நம்புகிறோம்."

சமஸ்தான மக்களின் போராட்டத்தைப்பற்றிய தகவல்களைக் கொடுக்காமலிருந்தபோதிலும், அதன் லட்சியத்தையும், உண்மையையும் திரித்துக்கூறி, பொய்ப்பிரச்சாரமாவது செய்யாமலிருக்குமா? இந்தப் பொய்ப் பிரச்சாரத்திற்குக் காரணமென்ன? திவானுக்கு வால்பிடிப்பதுதான் கொள்கையா, அல்லது பணம் பாதாளம்வரையிலும் பாயும் என்று சொல்கிறார்களே, அதுதான் காரணமா?

"ஒரு மாயத்திரையால் இந்த சமஸ்தானங்கள் மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன. சமஸ்தானங்களுக்குள் பத்திரிகைகளுக்கு ஆதரவளிக்கப்படவில்லை. வேண்டுமானால், இலக்கியம் சம்பந்தமான, அல்லது அநேகமாக சர்க்காரின் குரலைப் பிரதிபலிக்கிற வாரப் பத்திரிகைகளைத்தான் பிரசுரிக்கலாம். வெளியிலிருந்துவரும் பத்திரிகைகளுக்கு அடிக்கடி தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது......" என்று பண்டித ஜவஹர்லால் நேரு தமது "சுய சரித்திரத்தில்" குறிப்பிடுகிறார். இந்த வார்த்தைகள் முக்கியமாக திருவாங்கூருக்கு முற்றும் பொருத்தமானதே. சென்ற

வருடம் சேர்த்தலையிலும், அம்பலப்புழையிலும் யதேச்சாதிகாரத்தை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டம் நடந்தபொழுது, பல பத்திரிகைகளுக்கு தடை உத்தரவு போட்டதோடு, பல எழுத்தாளர்களும் கைது செய்யப்பட்டனர். "தேசாபிமானி" போன்ற பத்திரிகைகளை சமஸ்தானத்திற்குள் கொண்டுவரக் கூடாது என்று திவான் தடை உத்தரவு போட்டார்!

"இந்திரலோகம், சந்திரலோகம்" என்று ஏற்றிப் போற்றப் படும்நாட்டிலே, "முற்போக்கு மன்னரின்" ஆட்சியிலேயே என்ன நடக்கிறது?

மலைகளும், ஆறுகளும், கடற்கழிகளும், ரப்பர்—தேயிலை தோட்டங்களும், தொழிற்சாலைகளும் நிறைந்த வஞ்சி நாட்டிலே, பொதுமக்கள் பசியாலும், பிணியாலும் தவியாய் தவிக்கிறார்கள். திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள 61 லட்சம் மக்களுக்குத் தேவையான உணவில் 40 சதவிகிதம்தான் அங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அதையும்கூட கள்ளமார்க்கட் கொலைபாதகர்கள் பதுக்கி வருகிறார்கள். ஆனால், "திறமைசாலி, அதிமேதாவி, பாலைவனமாகக்கிடந்த திருவாங்கூரைப் பூந்தோட்டமாக்கினார்" என்று புகழ்மாலை சூட்டப்பட்ட திவான் சர் சி. பி. ராமஸ்வாமி ஐயர் மக்களுக்கு உணவளிக்க உருப்படியான திட்டத்தை வகுத்து, அதை அமுலுக்குக் கொண்டுவந்தாரா? இல்லை. "அன்னிய நாடுகளிலிருந்து உணவு இதோ வருகிறது, அதோ வருகிறது" என்று அறிக்கைமேல் அறிக்கைவிட்டார். ஆனால் அறிக்கைகளைக் காதால் கேட்டால், பசி தீருமா? நான்கு அவுன்ஸ் அரிசிகூடக் கிடைக்காமல் பொதுஜனங்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டார்கள். பசியால் பொறுமையை இழந்த பொதுமக்கள் பல பட்டினி ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அரிசி கேட்டவர்களுக்கு அடக்குமுறை கொடுக்கப்பட்டது!

திருவாங்கூரின் உண்மையான நிலைமையை கட்டுப்பாடாக வெளி உலகத்திற்குத் தெரிவிக்கவேயில்லை. இந்திய ஊழியர் சங்கத்தின் பிரமுகர்களில் ஒருவரான ஸ்ரீ. கே. ஜி. சிவஸ்வாமி திருவாங்கூரில் சுற்றுப்பிரயாணம் செய்து, புள்ளி விவரங்களோடு படுமோசமான உணவு நிலைமையைப் பற்றி ஒரு அறிக்கை விட்டார். பின்பு, பட்டினியால் பரதவிக்கும் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக திருவாங்கூருக்குப் போக முயற்சி செய்தபொழுது, திவான் அவருக்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டார். காரணமென்ன? "திருவாங்கூரில் பஞ்சமே கிடையாது; பாலும் தேனும் வழிந்தோடுகிறது" என்று பொய்ப் பிரச்சாரம் செய்து வந்தாரே, அந்த அண்டப்புளுகை அம்பலப்படுத்தியதுதான் காரணம்!

சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சராசரி வருட வருமானம் ரூபாய் 332. இதில் பெரும்பாலோர் 15, 20 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள். விவசாயத் தொழிலாளியின் சராசரி வருட

வருமானம் ரூ. 61. சாதாரண தொழிலாளியின் சராசரி வருட வருமானம் 80 ரூபாய்தான்.

சர்க்கார் அறிக்கைப்படி 7 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தானியம் உற்பத்தியாகிறது. இதில், ஒரு கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தானியம் வயலில் இறங்கி வேலையே செய்யாத நிலச்சுவான்தார்களுக்குப் போகிறது. "சுமார் 507 நிலச்சுவான்தார்களுக்கும், கம்பெனிகளுக்கும் (சுதேசிகளும், அன்னிய நாட்டினரும்) நிலம் சொந்தம். திருவாங்கூர் சமஸ்தானத்தின் மொத்த வருமானம் 80 கோடி ரூபாய். அதில் நிலச்சுவான்தார்களுக்கும், முதலாளிகளுக்கும் கிடைக்கும் வருமானம் 7½ கோடி ரூபாய். சுருங்கச் சொன்னால், மொத்த வருமானத்தில் பத்தில் ஒரு பாகம் திருவாங்கூரிலுள்ள 11,96,000 மொத்தக் குடும்பங்களில் 4340 குடும்பங்களுக்குக் கிடைத்தது... 1936-ம் வருடம் கலால் வருமானம் 23 லட்சம் ரூபாய். 1946-ல் 157 லட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இதன் அர்த்தமென்ன? பொதுமக்களுக்கு மதுவைக் கொடுத்து வருவாயை சர்க்கார் உயர்த்தியிருக்கிறது" என்று "பிரீபிரஸ் ஜர்னலில்" ஏ. ராகவன் எழுதுகிறார். (26-6-47).

சர்க்காரே நியமித்த ஒரு கமிட்டியின் அறிக்கைப்படி ஆலப்புழையிலுள்ள ஒரு கயறு பாக்டரி தொழிலாளியின் ஒரு மாத வருமானம் 16 ரூபாய். அதே சமயத்தில் ஒரு தொழிலாளியின் சராசரி மாதச் செலவு 20 ரூபாய். அதாவது, மாதா மாதம் கடன்வாங்கி தொழிலாளர்கள் ஜீவனம் செய்துவந்தார்கள். தேயிலை, ரப்பர் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் நிலைமை இன்னும் படுமோசம்.

திருவாங்கூரிலுள்ள சுதேச முதலாளிகள் மாத்திரமல்ல, சர்வதேச முதலாளிகளும் திருவாங்கூரின் இயற்கைச் செல்வத்தையும், மக்களையும் சுரண்டிக் கொழுந்தார்கள். உதாரணமாக தமிழ்நாட்டிலுள்ள டாக்டர் அளகப்ப செட்டியார் போன்ற சில செட்டியார்களுக்கு ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் சொந்தம். தேயிலைத் தோட்டம், ரப்பர் தோட்டம், கயறுசெய்யும் தொழிற்சாலைகள் முதலியவைகளில் பெரும்பாகம் கண்ணன்தேவன் கம்பெனி, பியர்ஸ் லெஸ்லி கம்பெனி, டாரா ஸ்மால், வால்கர்ட் பிரதர்ஸ், வில்லியம் கூடாக்கர், பாரி கம்பெனி முதலிய பல ஐரோப்பிய முதலாளிகளுக்குச் சொந்தம். அலுமீனியம் கம்பெனி கானடா தேசத்து முதலாளிகளுக்குச் சொந்தம்.

இவ்வாறு ஒருபுறத்திலே ஒருசில முதலாளிகள் லாபக் கொள்ளையடித்து, செல்வத்தில் புரண்டுகொண் டிருக்கும் பொழுது, மற்றொரு புறத்தில், பொதுமக்கள் வறுமையில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

தங்கள் குறைகளைத் தெரிவிக்கவும், உரிமையைக் கேட்கவும் பொதுமக்களுக்குச் சுதந்திரமே கிடையாது. காட்டுராஜா

தர்பார் ஜனநாயகக் குரலை அமுக்கிற்று. பிரஜா உரிமைகளோ, அரசியல் அதிகாரமோ கொஞ்சமேனும் பொதுமக்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைப்பற்றி ஏப்ரல் மாதம் குவாலியரில் நடந்த அகில இந்திய சமஸ்தான மக்களின் காங்கிரஸ் ஒரு தீர்மானத்தில் பின்வருமாறு குறிப்பிட்டது: "தொடர்ச்சியாக பிரஜா உரிமைகள் நசுக்கப்படுகின்றன. தொழிலாளர் ஸ்தாபனங்கள் நசுக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சங்க நடவடிக்கைகள் சிதறடிக்கப்பட்டிருக்கின்றன. பல தொழிற்சங்கங்களுக்கு தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது......பல தொழிலாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். திருவாங்கூர் சர்க்கார் சமீபத்தில் பிரகடனம் செய்திருக்கும் அரசியல் திட்டத்தின் ஷரத்துக்களைப் பார்த்தால், ஜனநாயக சர்க்காரை அமைக்க சர்க்கார் தயாராக இல்லை என்பதையே சுட்டிக்காண்பிக்கிறது. புதிய அரசியல் திட்டம் பொதுஜனங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கவேயில்லை. புதிய அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சமஸ்தான காங்கிரஸ் முடிவுசெய்திருப்பதை சரியென்று இந்த மகாநாடு கருதுகிறது. சமஸ்தானத்தின் அரசியல் திட்டத்தை வகுக்க, அரசியல் நிர்ணய சபையைக் கூட்டவேண்டும். அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதுவரையிலும், ஒரு இடைக்கால பொதுஜன மந்திரிசபையை அமைக்கவேண்டும்."

1938-ம் வருடத்திலிருந்து பொறுப்பாட்சி வேண்டும் என்று சமஸ்தான மக்கள் போராடிவருகிறார்கள். இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்தபிறகு, சமஸ்தானத்திலும் சுதந்திரப் போராட்டம் வலுத்தது. எனவே சமஸ்தான மக்களின் கண்ணைத் துடைக்க, "அமெரிக்க மாடல் அரசியல் திட்டத்தை" வழங்கினார் திவான். அமெரிக்காவில் அமுலிலிருக்கும் அரசியல் திட்டம் என்ற பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே, நமக்கு உடனே ஞாபகத்திற்கு வருவது அமெரிக்காவில் நீக்ரோக்கள் நாயினும் கடையராக நடத்தப்படுவதுதான்.

இந்த அமெரிக்கன் மாடல் அரசியல் திட்டப்படி, சட்டசபையும், நிர்வாக சபையும் அமைக்கப்படும். சட்டசபை ஏதேனும் தீர்மானங்களை நிறைவேற்றினால், அதை ரத்துசெய்ய நிர்வாக சபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்வாக சபையையும் மன்னன்தான் அமைப்பான். பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. இந்த நிர்வாக சபையை சட்டசபை கலைக்கமுடியாது. இந்த நிர்வாக சபைக்கு மன்னன்தான் தலைவன்.

ஆகவே, பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர இடமே கிடையாது. சட்டசபை "வெறும் வாதப்பிரதிவாத சபை"யாகத் திகழும்.

இந்த அமெரிக்க மாடல் அரசியல் திட்டப்படி, அமெரிக்காவில் வெள்ளையர்களுக்கு மாத்திரம் உரிமை வழங்கப்பட்டிருப்

பதுபோல், திருவாங்கூரிலுள்ள பணமூட்டைகளுக்கு மாத்திரம் உரிமை கிடைக்கும். அமெரிக்காவிலுள்ள வெள்ளையர்கள் நீக்ரோக்களை நசுக்கிவருவதுபோல், திருவாங்கூரிலுள்ள பண மூட்டைகள் பொதுமக்களைச் சுரண்டிக் கொழுப்பார்கள்.

ஆகவே, திருவாங்கூரிலுள்ள சகல பொதுஜன ஸ்தாபனங் களும், பொதுமக்களும் "அமெரிக்கன் மாடல் அரசியல் திட் டத்தை அரபிக் கடலில் போடுவோம்" என்று ஒரே குரலில் கோஷித்தார்கள்.

இம்மென்றால் சிறைவாசம்

"திருவாங்கூர் திவான் முன்னைவிட அதிகமாக யதேச்சாதிகாரி யாக நடந்துகொள்கிறார். பாஸிஸ்டுகளும், நாஜிகளும் நடந்து கொண்டதையே இது ஞாபக மூட்டுகிறது. தமது சொந்த ஹோதா வில் திருவாங்கூர் சுதந்திரமாக இருக்கும் என்று பிரகடனம் செய் திருக்கிறார். இதன் அர்த்தம், ஜனநாயகத்திற்கும், கண்ணியத்திற்கும் நேர் எதிரிடையாக திருவாங்கூர் திவான் தொடர்ந்து நடக்கப்போகி றார் என்பதுதான்" என்று ஜூன் மாதம் 13-ந் தேதி டில்லியில் நடந்த அகில இந்திய சமஸ்தான மக்களின் மகாநாட்டின் ஸ்டாண்டிங் கமிட்டி ஒரு தீர்மானத்தில் குறிப்பிடுகிறது.

பிரிட்டிஷ் இந்தியாவில் நடந்த ஒத்துழையாமை இயக்கமும், சத்தியாக்கிரகப் போராட்டமும் சமஸ்தான மக்களைத் தட்டியெழுப்பின. சுதந்திர ஆர்வத்தை ஊட்டின. ஆனால் விழிப்புற்ற சமஸ்தான மக்கள் விஸ்தாரமானரீதியில் சுதந்திரப் போராட்டத்தை நடத்தவில்லை.

1937-ம் வருடம் மாகாண சுயாட்சி அமுலுக்கு வந்த பொழுது, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மாகாணங்களில் பொது ஜன சர்க்கார் ஏற்பட்டபொழுது சமஸ்தான மக்கள் புத்துயிர் பெற்று போர்க்கொடியை உயர்த்தினார்கள். பிரஜா உரிமைகள் வேண்டும், பொறுப்பாட்சி வேண்டும் என்று சமஸ்தான மக்கள் கோஷித்தார்கள். சுதந்திரப் புயல் வீசியடிப்பதைக்கண்ட யதேச்சாதிகார மன்னர்கள் அதை அடக்கி ஒடுக்குவதற்காக கொடிய அடக்குமுறைகளைக் கையாண்டார்கள். ஆயினும், சுதந் திர உத்வேகத்தால் உந்தித்தள்ளப்பட்ட சமஸ்தான மக்கள் போர்க்களத்தில் குதித்தார்கள்.

1938-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 28-ந் தேதியன்று திருவாங் கூரில் சுதந்திரப் போராட்டம் வெடித்தது. திருவாங்கூர் சமஸ் தான காங்கிரசின் கொடியின்கீழ் திருவாங்கூரிலுள்ள தொழி லாளர்களும், விவசாயிகளும், மாணவர்களும், பொதுஜனங் களும் மாத்திரமல்ல, தமிழ்நாட்டிலும், பிரிட்டிஷ் மலையாளத்தி லும் உள்ள வீர வாலிபர்கள் யதேச்சாதிகார மன்னனை எதிர்த்து வீரப்போர் நடத்தினார்கள்.

பிரிட்டிஷ் மலையாளத்திலிருந்து ஏ. கே. கோபாலன், கே. தாமோதரன், வி. பி. சிண்டன், என். ஸி. சேகர் முதலிய வாலிபத் திலகங்கள் திருவாங்கூர் மக்களோடு தோளோடுதோள் நின்று போராடி தடியடியையும், குண்டுகளையும், சிறை வாழ்க்கையையும் புன்முறுவலோடு ஏற்றுக் கொண்டார்கள்.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று வீரகர்ஜனை செய்த மகாகவி பாரதியின் பரம்பரையைச் சேர்ந்த பாண்டியன், ஐயாசாமி, கருப்பையா முதலிய வீர வாலிபர்கள் திருவாங்கூருக்குச் சென்று யதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடினார்கள். பாண்டியன் என்ற சுதந்திர வீரனை திருவாங்கூர் சர்க்கார் போலீஸ் ஸ்டேஷனில் அடித்துக்கொன்றது!

பிரித்தாளும் சூழ்ச்சியை தனது பாட்டனை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து கற்றுக்கொண்ட திவான் சர். சி. பி. ராமஸ்வாமி ஐயர் சுதந்திரப் போராட்டத்தை "ஹிந்து அரசனைக் கவிழ்க்க, கிறிஸ்தவர்கள் நடத்தும் போராட்டம்" என்று பொய்ப்பிரச்சாரம் செய்தார். ஆயினும், ஏகாதிபத்தியத்தின் காலை நக்கிப் பிழைக்கும் திவானின் அண்டப்புளுகை ஜனநாயகவாதிகள் நம்பவேயில்லை. அகில இந்தியாவும் திருவாங்கூர் மக்களுக்கு ஆதரவளித்தது.

திருவாங்கூர் முழுவதும் போர்க்களமாக மாறிற்று. தடை உத்தரவுகளும், ராணுவச் சட்டமும் திருவாங்கூர் முழுவதும் கோரதாண்டவமாடிற்று. ஒன்பது இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. ஆலப்புழையிலுள்ள தொழிலாளர்கள் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்றார்கள். ஒரு மாத காலம்வரையிலும் ஆலப்புழை தொழிலாளர்களை அடக்கி ஒடுக்க முடியாமற்போயிற்று. ஆலப்புழை தொழிலாளர் வர்க்கத்தின் இரண்டு தலைவர்களை பின்பு தூக்குமேடையில் ஏற்றிற்று திருவாங்கூர் சர்க்கார்!

நூற்றுக்கணக்கான சுதந்திர வீரர்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள். ஆனால் அவர்கள் சிந்திய வீர ரத்தம், வீண்போகவில்லை. சுதந்திரக்கொடி வானளாவப் பறந்துகொண்டே இருந்தது. மேன்மேலும், பொதுமக்கள் ஒன்றுபட்டார்கள். திவானின் யதேச்சாதிகாரம் அஸ்திவாரத்தில் ஆட்டம் கொடுத்துக்கொண்டேயிருந்தது.........

இரண்டாவது உலக மகாயுத்தம் நடக்கும்பொழுது, திருவாங்கூர் மக்களை பஞ்சமும், பிணியும் பிடுங்கித் தின்றன. கள்ள மார்க்கட்டும், லஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடின.

யுத்தம் முடிந்தபிறகு துன்பங்கள் குறையாமல் அதிகரிக்கத்தான் செய்தன. பொதுமக்களின் கஷ்டங்களை நிவர்த்திசெய்யாமல், அடக்குமுறையை மேலும் கடுமையாகக் கையாண்டது யதேச்சாதிகாரம்!

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்தபின்பு, இந்தியா முழுவதும் பொதுஜனப் போராட்டங்கள் நடந்தன. மற்ற சமஸ்தானங்களைப்போல் திருவாங்கூரிலும் சுதந்திர எரிமலை குமுறிக்கொண்டிருந்தது. திருவாங்கூர் முழுவதும் கீழ்க்கண்ட கோஷங்கள் வானை முட்டின:

- திவான் ஆட்சி ஒழியவேண்டும். திவானின் சர்வாதிகார ஆட்சிக்குப் பதிலாக, பொதுஜன மந்திரிசபையை அமைக்கவேண்டும்.

- திருவாங்கூரின் எதிர்கால அரசியல் திட்டத்தை வகுக்க, முழு அதிகாரத்தையும் பெற்ற அரசியல் நிர்ணய சபையைக் கூட்டவேண்டும்.

- சர்வஜன வாக்குரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுஜனங்களின் பிரதிநிதிகளைத்தான் அகில இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்ப வேண்டும்.

பொதுஜனங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்காத அமெரிக்க மாடல் அரசியல் திட்டத்தை அளித்தார் திவான். "அதை அரபிக் கடலில் போடு" என்று ஒருமுகமாகப் பதில் கொடுத்தார்கள் பொதுமக்கள்.

1946-ம் வருடம் ஜுலை மாதத்தில் வைக்கத்திலுள்ள 2000 பேர்கள் தாசில்தாரின் ஆபீசுக்கு முன்பு "உணவு வேண்டும்" என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆகஸ்ட் மாதத்தில் ஆலப்புழையில் பெண்களும், குழந்தைகளும் உள்பட 2000 பேர்கள் தடை உத்தரவை உதாசீனம் செய்து தாசில்தாரின் ஆபீசுக்கு ஊர்வலமாகச் சென்று, அவர் பதுக்கிவைத்திருந்த தானியத்தைப் பொதுஜனங்களுக்கு வினியோகம் செய்யும்படி நிர்ப்பந்தித்தார்கள். இதேமாதிரியாக பல இடங்களில் பட்டினி ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

செப்டம்பர் மாதத்தில், வெள்ளை முதலாளி ரெய்னால்ட்ஸை எதிர்த்து வீரப் போராட்டத்தை நடத்திய தென் இந்திய ரெயில்வே தொழிலாளர்களுக்கு அனுதாபம் காட்டும் பொருட்டு, பல போராட்டங்களில் புடம்போட்டெடுக்கப்பட்ட ஆலப்புழை, சேர்த்தலை, ஆலுவாய் முதலிய நகரங்களிலுள்ள 70,000 தொழிலாளர்கள் ஒரு நாள் அனுதாப வேலைநிறுத்தம் செய்தார்கள்.

பொதுஜனங்கள் போர் முரசு கொட்டுவதைக் கேட்ட ஏகாதிபத்திய தாஸானுதாஸர் திவான் சர் சி. பி. ராமஸ்வாமி ஐயர், சுதந்திர இயக்கத்தைப் பிளவுபடுத்தும் நாசகாரப் பணியில் ஈடுபட்டார்.

"சகல பொதுஜன ஸ்தாபனங்களும் போர்க்களத்தில் குதிக்கும் தருவாயிலிருந்தன. ஆனல், திருவாங்கூர் முழுவதும் புரட்சி

கரமான சூழ்நிலை ஏற்பட்டதைக்கண்டு நடுநடுங்கிய சமஸ்தான காங்கிரசின் தலைமை, அமெரிக்க மாடல் அரசியல் திட்டத்தின் அடிப்படையில் திவானோடு சமரசப் பேச்சு வார்த்தைகளை நடத்தி, புரட்சிகரமான சூழ்நிலையிலிருந்து தப்பிக்க முயற்சி செய்தது. இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு ஒவ்வொரு கூட்டமாக, பொதுஜன எதிர்ப்பைச் சிதறடிப்பதற்கு அங்குரார்ப்பணமாக, கம்யூனிஸ்டு தொழிலாளர்கள் மீது பார்வையைச் செலுத்தினார் திவான். தொழிலாளர்களை எதிர்த்துப் போராட ரௌடிகளின் படையைத்திரட்ட முதலாளிகளையும், ஜமீந்தார்களையும் தூண்டிவிட்டார். இயற்கையாகவே ரௌடிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே கைகலந்த சண்டை நடந்தது. சர்க்கார் தலையிடுவதற்கு இது சாதகமாகப் பயன்பட்டது" என்று திருவாங்கூர் சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீ கண்டன் நாயர் "ஜனதா"வில் சர் சி. பி. யின் பிரித்தாளும் சூழ்ச்சியையும் சமஸ்தான காங்கிரஸ் தலைமையின் சரணாகதிக் கொள்கையையும் அம்பலப்படுத்துகிறார்.

பட்டம் தாணுப்பிள்ளையைப் போன்ற வலதுசாரித் தலைவர்கள் திவானுக்கு அடிபணிந்து போகும் கொள்கையைப் பின்பற்றினார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகளும், சோஷலிஸ்டுகளும் ஸி. கேசவன், கும்பளத்து சங்குப்பிள்ளை முதலிய சமஸ்தான காங்கிரசின் தலைவர்களும் சரணாகதிக் கொள்கையை வன்மையாக எதிர்த்தார்கள்.

தேசீய இயக்கத்தில் பிளவு ஏற்படவும், திவானுக்குத் துணிச்சல் வந்தது. பாஸிஸ்டு விசுவரூபமெடுத்தார். புதிய அவசரச் சட்டமொன்றை 1946-ம் வருடம் அக்டோபர் மாதம் பிரகடனம் செய்தார். அதன்படி:

● வேலை நிறுத்தங்கள் சட்டவிரோதமாக்கப்பட்டன. கோஷங்கள் கோஷிக்கக்கூடாது. கொடிகளைப் பறக்கவிடக்கூடாது. பொதுக் கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் தடை. இந்தத் தடை உத்தரவு 1-10-46 முதல் 1-10-48 வரையிலும் அமுலிலிருக்கும்.

● திருவாங்கூர் கம்யூனிஸ்ட் தலைவர் கெ. ஸி. ஜார்ஜ் எழுதிய "திவான் ஆட்சி ஒழிக" என்ற புத்தகமும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அங்கத்தினர் இ. எம். எஸ். நம்பூதிரிபாட் எழுதிய "ஐக்கிய கேரளம்" என்ற புத்தகமும் பறிமுதல் செய்யப்பட்டன.

இத்துடன் கம்யூனிஸ்டு கட்சியின் மலையாள 'தேசாபிமானி", இங்கிலீஷ் "பீப்பில்ஸ் ஏஜ்" சமஸ்தானத்திற்குள் கொண்டுவரக் கூடாது என்று தடை உத்தரவு போட்டார் திவான். ஏற்கனவே, சமஸ்தான காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் அக்கம்மச் செரியன், சங்கரநாராயண தம்பி முதலியவர்கள் உள்பட 100

பேருக்குமேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். 50 பேர்களை போலீஸார் வேட்டையாடி வந்தனர். 1938-ல் பொறுப்பாட்சிப் போர் சிகரத்தை அடைந்திருந்த பொழுதுகூட 500 பேர்கள் தான் சிறையிலடைக்கப்பட்டிருந்தார்கள்!

ஆனால் திருவாங்கூர் மக்கள், முக்கியமாக ஸ்தாபனரீதியாக ஒன்றுபட்ட தொழிலாளர்களும், விவசாயிகளும் சர் சி. பி. யின் அடக்குமுறைக்கு அடிபணிய மறுத்தார்கள்.

அக்டோபர் 17: சுமார் 200 தொழிலாளர்கள் ஆலப்புழையிலுள்ள தொழிற்சங்க ஆபீசுக்கு முன்பு கூடியிருந்தனர். தொழிலாளர்களைப் பயமுறுத்துவதற்காக ஒரு ராணுவத்தை அனுப்பினர் சர் சி. பி. ராணுவமும் ஆபீசுக்கு முன்பு வந்தது.

"எங்கள் ஆபீசுக்கு முன்பு போகக்கூடாது. வந்த வழியே திரும்பிப்போ" என்று தொழிலாளர்கள் கோஷித்தார்கள்.

ஆத்திரமடைந்த ராணுவ ஆபீஸர், "விலகி நில்லுங்கள்—மறுத்தால் சுடுவேன்" என்று கத்தினன்.

"சுடு பார்க்கலாம்" என்று ஆணித்தரமாக பதில் கொடுத்து, சகல தொழிலாளர்களும் தரையில் உட்கார்ந்தார்கள்.

தொழிலாளர்களின் தைரியமும், வீரமும் சிப்பாய்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போய்விட்டது. திரும்பிப் போகும்படி ராணுவத் தலைவர் சிப்பாய்களுக்கு உத்தரவிட்டார்.

அக்டோபர் 18-ல் ஆலுவாய் நகரம்: கே. ஸி. மாத்திவ் என்ற தொழிலாளர் தலைவரை போலீஸார் பல நாட்களாக வேட்டையாடி வருகிறார்கள். இன்று ஒரு போலீஸ் படை மாத்திவை வளைத்துக்கொண்டது. ஆனல், அங்குள்ள பொதுமக்கள் மாத்திவை விடுதலை செய்யும்படி ஒரு முகமாகக் கோரினர்கள். "சர்க்காரை ஆதரிப்பவர்கள் ஒருவர்கூட இங்கே இல்லையா?" என்று சப் இன்ஸ்பெக்டர் கத்தினர்.

"இல்லை" என்று யாவரும் பதில் கொடுத்தார்கள். ஆம், பொதுமக்களை நசுக்கித் தேய்க்கும் யதேச்சாதிகார சர்க்காரை ஆதரிப்பவர்கள் திருவாங்கூரில் ஒருவரும் கிடையாது!

உடனே மேலும் போலீஸை அனுப்பும்படி போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவித்தார்.

மேலும் ஏராளமான போலீஸ் வந்து, மாத்திவை பொது ஜனங்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டுபோயிற்று.

மறுநாள் ஹார்த்தால். கடைகள் திறக்கப்படவில்லை. தொழிற்சாலைகள் மூடிக்கிடந்தன.

தங்கள் தலைவரைப் பூட்டி வைத்திருக்கும் போலீஸ் ஸ்டேஷன் கட்டிடத்தின்மேல் ஏறி, செங்கொடியை வானளாவப் பறக்க விட்டார்கள் பாட்டாளி மக்கள்.

அக்டோபர் மாதம் 19-ந் தேதி அகில திருவாங்கூர் பொறுப் பாட்சி தினத்தை கொண்டாடும்படி சமஸ்தான காங்கிரஸ் அறை கூவி யிருந்தது. அன்று மாணவர்களோ, தொழிலாளர்களோ வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்றும், ஆர்ப்பாட்டங்களோ, ஹர்த்தாலோ செய்யக்கூடாது என்றும் சமஸ்தான காங்கிரசின் தலைவர் பட்டம் தாணுப் பிள்ளை அறிக்கை வெளியிட்டிருந்தார். ஆனால், பல இடங்களில் பொதுவேலை நிறுத்தங்களும், ஹாத் தால்களும் நடந்தன. திருவனந்தபுரத்திலுள்ள பிரஸ் தொழி லாளர்கள் அன்றுதான் அவர்கள் சரித்திரத்திலேயே முதன் முதலில் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆலுவாயில் போலீஸ் ஸ்டேஷனிலும், அரண்மனையிலும் மூவர்ணக் கொடியையும், செங்கொடியையும் பறக்கவிட்டு பொறுப்பாட்சி தினம் கொண் டாடப்பட்டது.

மேலும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டார் திவான். சுமார் 22 தொழிற் சங்கங்களும், கம்யூனிஸ்டுக் கட்சியும் சட்ட விரோதமாக்கப்பட்டன. சேர்த்தலை, அம்பலப்புழை ஆகிய இரு தாலூக்காக்களிலும் ராணுவ ஆட்சி பிரகடனம் செய்யப் பட்டது. தொழிலாளர்களையும், பொதுஜனங்களையும் ராணுவ மும், போலீசும் முதலாளிகளதும், நிலச் சுவான்தார்களதும் ரௌடிகளும் மிருகத்தனமாக இம்சித்து வந்தார்கள்.

அடக்குமுறையை சர்க்கார் நிறுத்தாதது வரையிலும் அக் டோபர் மாதம் 22-ந் தேதியிலிருந்து திருவாங்கூர் முழுவதும் பொதுவேலை நிறுத்தம் செய்யும்படி அகில திருவாங்கூர் டிரேட் யூனியன் காங்கிரஸ் அறைகூவிற்று. திருவாங்கூர் முழுவதும் 1,30,000 தொழிலாளர்கள் அவ்வாறே பொதுவேலை நிறுத்தம் செய்தார்கள்.

திருவாங்கூர் மஹாராஜாவின் பிறந்த தினத்தன்று அக் டோபர் மாதம் 24-ந் தேதியன்று, ஆலப்புழையில் பொதுஜனங் களுக்கு திவான் கொடுத்த பரிசு துப்பாக்கிப் பிரயோகம்தான்! ஏ. பி. ஐ. அறிக்கைப்படி ஒருவர் உடனே மாண்டுபோனார். மற் றொருவருக்கு பலத்த காயம்!!

அக்டோபர் 25-ந் தேதி யன்று ஸர் சி. பி., லெப்டினண்ட் ஜெனரல் ஸர் சி. பி. ஆனார்.

அக்டோபர் மாதம் 26-ந் தேதிக்குள் திருவாங்கூர் தொழி லாளர் வர்க்கம் 26 தியாகிகளை சுதந்திரத்திற்காகப் பலி கொடுத் தது. சமஸ்தான காங்கிரசின் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் 9 பேர்களும், அகில திருவாங்கூர் டிரேட் யூனியன் காங்கிரசின் தலைவர் டி. வி. தாமஸூம், பொதுக்காரியதரிசி ஆர். ஸுகதனும் கிருஸ்தவர்களின் ஸ்தாபனத்தின் தலைவர்களான எம். ஸி மாத் திவ், செரியன் கப்பன், கத்தோலிக்க யுவ காங்கிரசின் தலைவர் கெ. எம். சாண்டி, கத்தோலிக்க காங்கிரசின் தலைவர்கள் பி. சி. சாக்கோ, ஆர். வி. தாமஸ் முதலியவர்களும், பொன்குன்னம் வர்க்கி,

பாஸ்கரன் போன்ற முற்போக்கு எழுத்தாளர்களும், கைது செய்யப்பட்டனர். திருவாங்கூர் சிறைகள் எல்லாம் நிரம்பின. பின்னர் சுட்டு வீழ்த்துவதில் முனைந்தார். சேர்த்தலை, அம்பலப்புழை தாலூக்காக்களில் உள்ள தொழிலாளர் வர்க்கம் விவசாயிகளோடும், பொதுஜனங்களோடும் தோளோடு தோள் நின்று இத்தகைய அக்கிரமத்தை எதிர்த்துப் போராடுவது என்று முடிவு செய்தது.

1857-ம் வருடத்தில் நடந்த சிப்பாய்க் கலகத்திற்குப் பின்பு, இன்று வரையிலும் நமது நாட்டின் சுதந்திர இயக்க சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கவேண்டிய பல மகிமை பொருந்திய சம்பவங்கள் நடந்திருக்கின்றன. வயலாறிலும், புன்னப்பிராவிலும் நடந்த வீரம்செறிந்த போராட்டங்கள் மேலும் இரண்டு அத்தியாயங்களை எழுதி யிருக்கின்றன.

புன்னப்பிரா......ஆலப்புழையிலிருந்து மூன்று மைல் தூரத்திலிருக்கிறது. நமது சுதந்திரப் போராட்டத்தின் சரித்திரத்தில் இந்தச் சின்னஞ்சிறு கிராமம் அமரத்துவம் பெற்றிருக்கிறது. இன்று நம்மீது யுத்தப் பிரகடனம் செய்கிற திவானுக்கு சவப்பெட்டியைத் தயாரித்த கிராமம் அது..........

அந்தக் கிராமத்தை மக்கள் ஒருக்காலத்திலும் மறக்கவே மாட்டார்கள். ஏன்? தேசபக்தர்களின் ரத்தம் சிந்திக் கிடக்கும் புனித பூமி அது. அதுமாத்திரமல்ல, சுதந்திரப் போராட்டத்தை நடத்தி, வெற்றிக் கொடி அங்கு நாட்டப்பட்டது.

"இதோ, நமது மூதாதையர்கள் யதேச்சாதிகாரத்தின் சிறிய கோட்டையைப் போராடிக் கைப்பற்றிய சுதந்திர பூமி" என்று கூறி வருங்கால சந்ததிகள் வணங்குவார்கள்.

புன்னப்பிரா கைப்பற்றப்பட்டது......—சிறிது காலம்தான் சுதந்திர வீரர்களின் கையில் இருந்தது. ஆயினும் என்ன? நாளைக்கு திருவாங்கூர் முழுவதையும் இப்படித்தான் கைப்பற்ற வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக, ஆதர்சமாக மிளிர்கிறது.

அக்டோபர் 24: மஹாராஜாவின் பிறந்த தினம். ஆலப்புழை, அன்று அல்லோலகல்லோலப்பட்டது. சுதந்திர நாதம் எங்கும் முழங்கிற்று. ராணுவச் சட்டம் அமுலிலிருக்கிறது. ராணுவம் கலகலவென்று வீதிகளில் அங்குமிங்கும் ஊடுருவிப் பாய்ந்துகொண்டிருந்தது.

வீர சுதந்திரம் வேண்டி நின்றார், பின்னர்.........?

ராணுவச் சட்டத்தையும், ராணுவத்தையும் துச்சமாக நினைத்தார்கள் பொதுமக்கள். கடல் மடை திறந்தாற்போல் பொதுஜன வெள்ளம் புன்னப்பிராவை நோக்கி சென்றது.

புன்னப்பிரா ராணுவ முகாம். சுமார் 48 சிப்பாய்கள் 10,000 பேர்களைக் கண்டார்கள். அடிவயிறு கலங்கிற்று. நய

வஞ்சகம்தான் நம்மைக் காப்பாற்றும் என்று நினைத்தான் காப்டன். "வரலாம், பயப்படாமல் வரலாம், சுடவே மாட்டோம்" என்று கத்தினான் காப்டன். ஊர்வலம் முகாமை நோக்கி முன்னேறிற்று. திடீரென்று "சுடு" என்ற சப்தம். ஆம், காப்டன்தான்!

சிப்பாய்கள் சிட்டாய் பறந்து, தாங்கள் தங்கியிருந்த வீட்டிற்குள் ஓடி, ஜன்னல் வழியாக குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்தார்கள்.

அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகத்தோடு பரிச்சயமான பாட்டாளி மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லியா கொடுக்கவேண்டும்? பயிற்சிபெற்ற சிப்பாய்களைப்போல் நொடிப் பொழுதில் தரையில் படுத்துக்கொண்டு, விர்ரென்று பாயும் குண்டுமழைக்கு மத்தியில் முகாமை நோக்கி ஊர்ந்து சென்றார்கள். குண்டுமழை நிற்கவேயில்லை. ஆனால் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரத் தொழிலாளர்கள் பின்வாங்க வில்லை.

தொழிலாளர்கள் அருகே வந்துவிட்டார்கள். அபாயம் அதிகரித்துவிட்டது. ஆனால் குண்டுகள் காலி; துப்பாக்கி முனையால் குத்த ஆரம்பித்தார்கள். வெறுங்கைதான்; ஆயுதமே கிடையாது. ஆனால், அது தொழிலாளியின் இரும்புக் கரமல்லவா? அதன் பலத்திற்கு இணை அதுதானே!

தொப்பென்று காப்டன் வீழ்ந்தான். இல்லை, யதேச்சாதிகாரத்தைத் தாங்கிநிற்கும் முதல் தூண் சரிந்து வீழ்ந்தது. அவனுக்குப் பின் மேலும் பல.........எஞ்சிய சிப்பாய்கள் துப்பாக்கியை எறிந்துவிட்டு, வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடினார்கள். ஆனால் எங்கே ஓடுவது? ராணுவ முகாம் துடைத்தெறியப்பட்டது ஏழு தொழிலாளர்களின் உயிர்த் தியாகத்தின்மேல் சுதந்திரக்கொடி நாட்டப்பட்டது. அதோ, பாட்டாளி மக்கள் செங்குருதியைச் சிந்தி வளர்த்த போர்க்கொடி, திருவாங்கூர் முழுவதும் பறக்கிறது!

தளபதி திவானும், அவரது கிராமபோன் பிளேட்டான ஏ. பி. ஐ. செய்தி ஸ்தாபனமும் இந்த மகத்தான போராட்டத்தைப்பற்றி பேச்சி மூச்சு காட்டவில்லை. ஏன்? 17 சிப்பாய்களின் தலைகள் தரையில் உருண்டன. 27 சிப்பாய்கள் படுகாயமுற்று மண்ணில் புரண்டார்கள்.

வாகைமாலை சூடிய வீரர்களுக்கு பரிசும் கிடைத்தது. 17 துப்பாக்கிகள்!......

பின்னர் பட்டாளமும், போலீசும், முதலாளிகளதும், நிலச்சுவான்தார்களது ரௌடிகளும் நரவேட்டை யாடினார்கள். கொலை, கொள்ளை, தீவைத்தல் முதலியன தலைவிரித்தாடின.

இதோடுகூடவே, பொதுஜனங்களைப் பட்டினி போட்டுப் பணியவைக்கத் திட்டம் போட்டான் திவான். ரேஷன் கடை

கள் மூடப்பட்டன. பட்டினியும், இம்சையும் எல்லையை மீறின. பொதுமக்களில் பலர் அங்குமிங்கும் அபயம் தேடிப் போனார்கள்.

சேர்த்தலைக்கு மேற்கே இருக்கிறது வயலார் என்ற தீவு. அதில், ஏராளமான ஆண்களும், பெண்களும் திவானின் கொடுமையைத் தவிர்க்க, வயலாறில் தங்கியிருந்தார்கள். அக்டோபர் 26-ந் தேதி திவானின் துருப்புகள் அந்தத் தீவை முற்றுகை போட்டன. கொஞ்ச நஞ்சமல்ல, 1000 சிப்பாய்கள் சமஸ்தானத்திலுள்ள மொத்த ராணுவத்தில் நான்கில் ஒரு பங்கினர்.

கம்யூனிஸ்டு கட்சியை வன்மையாக எதிர்க்கும் "தீபிக" "மலபார் மெயில்" முதலிய பத்திரிகைகள் வயலாறில் நடந்த வீரம்செறிந்த போராட்டத்தைப்பற்றி பின்வருமாறு எழுதின:

வயலாறுக்கு "புதிய மாஸ்கோ" என்று புதிய பெயரைச் சூட்டியிருந்தார்கள். அக்டோபர் 26-ந் தேதியன்று மாலையில் பட்டாளமும், போலீசும் வயலாறை வளைத்துக்கொண்டன. நவீன ஆயுதங்களை வைத்திருக்கும் படைகளை எதிர்க்கலாம் என்று கம்யூனிஸ்டுகள் நினைத்தார்கள்.

அம்பு, வில், ஈட்டி, துப்பாக்கி முதலிய கருவிகள் வைத்திருந்தார்கள் கம்யூனிஸ்டுகள்.

தென்னை மரங்களை வெட்டி, அவைகளைச் சுவர்களாகக் கட்டி, அவைகளுக்குள் கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள். அகழிகளை வெட்டி, அவைகளின்மேல் புல்லைப் பரப்பியிருந்தார்கள்.

வயலார் முகாமில் 300 பெண்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கும் ராணுவப் பயிற்சி அளிக்கப்படுவதாகத் தெரிகிறது. கையில் அரிவாளுடன் "மார்ச்" செய்து வருவதாகத் தெரிகிறது.........

வயலாறை ராணுவம் வளைத்துக்கொண்டது. சரணாகதியடையும்படி ராணுவம் உத்தரவிட்டது. ஆனால், அடிபணிய மறுத்தார்கள். உடனே ராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

கடைசி குண்டு இருக்கும் வரையிலும் சுட்டார்கள். 17,000 குண்டுகள் காலியான பிறகு, பீரங்கிகளை உபயோகிக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.

கையில் ஈட்டிகளுடனும், மடியில் கற்களுடனும் பட்டாளத்தை எதிர்த்துப் போராடினார்கள் பொதுமக்கள். செத்து விழுந்த ஒவ்வொருவரும் "திவான் ஆட்சி ஒழிக" "புரட்சி ஓங்குக" என்று கோஷித்தார்கள். புறமுதுகு காட்டி ஓடும் மனோபாவம் அவர்களிடத்தில் இல்லை.

பெண்களைச் சுடக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. கையில் அரிவாளுடனும், மடியில் கற்களுடனும் பெண்களும் போராடினார்கள். கற்களை வீசி, பட்டாளத்தைத் தாக்கினார்கள். எனவே, பெண்களையும்கூட சுட்டு வீழ்த்தினார்கள்.

இரான், இத்தாலி முதலிய போர்க்களங்களிலிருந்து புகழு டன் திரும்பிய மாஜி சிப்பாய்கள், ராணுவப் பயிற்சி பெற்ற கலகக்காரர்களுக்கு தலைமை தாங்கினார்கள். இவர்கள் தொடர்ச்சியாகவும், உக்ரமாகவும் போராடியதைக்கண்டு சர்க்கார் படைகள் திகைத்துப் போயின............

போராட்டத்தை எதிர்த்த பத்திரிகைகள் கூறும் விவரம் இது: அக்டோபர் 26, 27-ந் தேதிகளில், 48 மணி நேரம் உக்ரமாகப் போராட்டம் நடந்தது. திவானின் யதேச்சாதிகார ஆட்சியை ஒழித்துக்கட்டி, சுதந்திர திருவாங்கூரை உருவாக்க சுமார் 200 வீரர்களுக்குமேல் வயலாறில் உயிர்த்தியாகம் செய்தார்கள்.

திருவாங்கூரில் சேர்த்தலை, அம்பலப்புழை ஆகிய இரு தாலூக்காக்களில்தான் தொழிற்சாலைகள் அதிகம். சர்வதேச முதலாளிகளின் கேந்திரஸ்தானம். திருவாங்கூர் மாத்திரமல்ல, அகில இந்தியாவிலிருந்தும் வெள்ளை முதலாளிகள் ஆதிக்கத்தையும், யதேச்சாதிகார ஆட்சியையும் அரபிக்கடலில் ஆழப் புதைக்க திருவாங்கூர் தொழிலாளர் வர்க்கம் வயலாறில் போராடிற்று. அவர்கள் தியாகம் வீண் போகவில்லை. யதேச்சாதிகார ஆட்சியும், ஏகாதிபத்திய ஆட்சியும் அஸ்திவாரத்தில் ஆட்டம் கொடுத்துவிட்டது. வயலார் வாழ்க! புன்னப்பிரா வாழ்க!! தியாகிகள் வாழ்க!!!

தளபதி திவான் பாஸிஸ்டு பேயாட்சியைக் கட்டவிழ்த்து விட்டான். ஆனால் சுதந்திர இயக்கத்தை வேரறுக்க முடிந்ததா? இல்லை! சுதந்திர ஆர்வத்தைச் சிதறடிக்க முடிந்ததா? இல்லை.

திவானின் பச்சைசப் புளுகுக்கு எல்லையே கிடையாது. "கம்யூனிஸ்டு கலகக்காரர்களைக் கருவறுத்துவிட்டேன்" என்று தம்பட்டமடித்தார் திவான்.

ஆனால், திருவாங்கூர் கம்யூனிஸ்டு கட்சியின் ஏழு மத்திய கமிட்டியின் அங்கத்தினர்களில் ஐந்து பேர்களைப் பிடிக்க முடியவில்லை. மற்ற இரண்டு பேர்களும், போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு கைது செய்யப்பட்டார்கள். இன்னும் ஒளிவு மறைவாக இருந்துகொண்டு திவானின் யதேச்சாதிகாரத்தைக் கெல்லி எறிய தீவிரமாக வேலை செய்துகொண்டேயிருக்கிறார்கள்.

தொழிலாளர் வர்க்கம்தான் முதலாளிகளுக்குச் சரணாகதி அடைந்ததா? இல்லை. முதலாளிகளை எதிர்த்து இன்னும் போராடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

பொறுப்பாட்சிப் போராட்டத்திற்குச் சாவுமணி அடித்துவிட்டாரா? இல்லை. காங்கிரஸ், சோஷலிஸ்டுக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களும், சுதந்திரப் பிரேமிகளும் இன்னும் வன்மையாக யதேச்சாதிகாரததை எதிர்த்து வருகிறார்கள்.

அமரத்துவம் பெற்றிருக்கும் புன்னப்பிராவும், வயலாறும் யதேச்சாதிகாரத்திற்குச் சவப்பெட்டியைத் தயாரித்தன.

பொய்ப் பிரச்சாரத்தின் மூலமாகவும், பிரித்தாளும் சூழ்ச்சியாலும்தான் யதேச்சாதிகார ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.

"கம்யூனிஸ்டுகள் கலகம்" என்று சுதந்திரப் போராட்டத்தைத் திரித்துக்கூறி, தேசீய இயக்கத்தைப் பிளவுபடுத்தினர். சமஸ்தான காங்கிரஸ் தலைமையில் பட்டம் தாணுப்பிள்ளையைப் போன்றவர்கள் இந்த அண்டப்புளுகுக்கு, பிரித்தாளும் சூழ்ச்சிக்கு பலியானர்கள்! சமஸ்தான காங்கிரஸ் போராட்டத்தில் சேராமல் ஒதுங்கி நின்றது.

கம்யூனிஸ்டு கலகமானல், கம்யூனிஸ்டுகளை மாத்திரம்தானே கைதுசெய்ய வேண்டும்? ஸி. கேசவன், கும்பளத்து சங்குப் பிள்ளை முதலியவர்களைப் போன்ற ஒன்பது சமஸ்தான காங்கிரசின் காரியக் கமிட்டி அங்கத்தினர்களை ஏன் கைது செய்யவேண்டும்? ஸ்ரீ கண்டன் நாயர், ஜனர்த்தனன் போன்ற சோஷலிஸ்டு கட்சியின் தலைவர்களை ஏன் கைதுசெய்ய வேண்டும்? கிருஸ்துவ மத ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களை ஏன் கைது செய்யவேண்டும்? இது பொதுமக்களின் கேள்வி. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் அம்பலமாயிற்று!

"கம்யூனிஸ்டு எதிர்ப்பு"த் திரையின் கீழ் தேசிய இயக்கத்தையே நசுக்க வந்தார். உதாரணமாக, 1947ம் வருடம் ஜனவரி மாதம் 5ந் தேதியன்று சுசீந்திரத்தில் திருவிழா நடந்தது. அப்பொழுது, தேரில் தேசீயக் கொடி பறக்கவிடப்பட்டது. உடனே தேசீயக் கொடியை இறக்கும்படி திவானின் யதேச்சாதிகார சர்க்கார் உத்திரவிட்டது. தேசபக்தர்கள் மறுக்கவும், கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது. 6 பேர்கள் உடனே இறந்து போனர்கள். பலருக்கு படுகாயம். இன்னும் 85 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது......

"இது பொறுப்பாட்சிப் போர், பொதுஜனப் போர்" என்று திருவாங்கூர் சமஸ்தான காங்கிரசின் மாஜி பொதுக்காரியதரிசி அன்னமாஸ்கரீன் கூறினர். காங்கிரசிலுள்ள இடதுசாரிகளும், சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் அந்தப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஆனல், துரதிர்ஷ்டவசமாக சகல கட்சிகளும் ஐக்ய முன்னணியை அப்பொழுது அமைக்கவில்லையென்ருலும், இனி பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இடமளிக்கக் கூடாது என்று முடிவு செய்தார்கள். அன்று புன்னப்பிராவிலும், வயலாரிலும் இன்னுயிரை அர்ப்பணம் செய்த தொழிலாளர்களின் தியாகம் வீண்போகவில்லை. யதேச்சாதிகாரத்தை ஒழிக்க சர்வ கட்சி ஒற்றுமை அவசியம். இன்று, சர்வ கட்சி ஐக்கிய முன்னணி வேண்டும் என்று யாவரும் கூறுகிருர்கள். திவானின் அழுகி நாற்றமெடுத்த கம்யூனிஸ்டு எதிர்ப்புப் பிரச்சாரத்தை இன்று வாங்குவார் ஒருவருமே கிடையாது.

வயலாறிலும், புன்னப்பிராவிலும் நடந்த வீரப்போராட்டத்தைக் "கம்யூனிஸ்டு கலகம்" என்று பொய்ப் பிரச்சாரம் செய்து, அகில இந்தியாவின் ஆதரவு கிடைக்காதவாறு சூழ்ச்சி செய்தார் திவான்!

கம்யூனிஸ்டு கட்சியும், தொழிற்சங்க இயக்கமும், மாணவர்களும்தான் திவானின் சூழ்ச்சிக்கு பலியாகவில்லை. மலையாளத்திலிருந்தும், சென்னையிலிருந்தும் மாணவர்கள் ஜாதாக்கள் திருவாங்கூருக்குச் சென்றன. ராமச்சந்திரன், மோஹன் ரெட்டி, வாசுதேவன், பிரகாசம் முதலிய வீரவாலிபர்கள் திருவாங்கூர் போர்க்களத்திற்குச் சென்றார்கள்.

காங்கிரஸ் தலைவர்கள் ஆதரிக்கவில்லை. சென்னை காங்கிரஸ் மந்திரிசபை வர்க்கீஸ் வைத்தியர், பென் போன்றவர்களை திவானுக்குப் பிடித்துக் கொடுத்தது. இன்று கூட, திருவாங்கூர் போராட்டத்தை ஆதரித்து, திருவாங்கூருக்கு ஜாதாவை அழைத்துச் சென்றதற்காக, சென்னை மாணவர் கழகத்தின் காரியதரிசி பி. ராமச்சந்திரன், மோஹன் ரெட்டி இன்னும் பாதுகாப்பு கைதிகளாக வேலூர் சிறையில் வாடுகிறார்கள்.

"இது கம்யூனிஸ்டுகளுக்கும், மற்றவர்களுக்கும் இடையேயுள்ள பிரச்சினையல்ல. போராடும் மக்களுக்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் ஆதரவைப்பெற்ற யதேச்சாதிகாரத்திற்கும் இடையே நடக்கும் போராட்டம் இது. திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு வெளியேயுள்ள நாம் நம்மால் முடிந்த உதவியை செய்வோமாக. சமஸ்தானத்திற்குள் அவர்கள் முழு சக்தியையும் உபயோகித்துப் போராடட்டும். இந்தியர்கள் அனைவருக்கும் பொதுவான சுதந்திரப் போராட்டம் இது" என்று இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுக்காரியதரிசி பி. ஸி. ஜோஷி எச்சரிக்கைவிடுத்தார்.

ஆனால், தேசீய இயக்கத்தின் தலைமை அதற்குச் செவிசாய்க்கவில்லை சமஸ்தான மக்களின் போராட்டத்தை, அகில இந்தியாவின் போராட்டமாக மாற்றவிடாமல் தடுப்பதில் தற்காலிகமாக திவான் வெற்றிபெற்றார்.

ஆனால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும், அகில இந்திய சமஸ்தான மக்களின் காங்கிரசும், காந்திஜீ, நேருஜீ போன்ற தலைவர்களும் இன்று சமஸ்தான மக்களின் போராட்டத்தை முழுக்க முழுக்க ஆதரிக்கத் துவங்கியிருக்கிறார்கள்.

திவானின் சுயசொரூபம்

"ஆகஸ்ட் மாதம் 15-ந்தேதி திருவாங்கூர் சமஸ்தானம் சுதந்திரப் பிரகடனம் செய்யும். இப்பொழுது நடக்கும் அரசியல் நிர்ணய சபையில் சேராது. ஆகஸ்ட் மாதம் 15-ந்தேதி திருவாங்கூர் சுதந்திர நாடாகத் திகழ்வதை உலகில் எந்த சக்தியும் தடுக்கமுடியாது. பகிரங்கமாக யுத்தப் பிரகடனம் செய்வதன் மூலமாகத்தான் தடுக்க முடியும். அதற்கும் சமஸ்தானம் தயாராக இருக்கிறது" என்று ஜூன் மாதம் 13-ந்தேதி திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், போர் முழக்கம் செய்தார்.

திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவானாக இருக்கும் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் யார், பூர்வ சரித்திரம் என்ன?

1917—18-ம் வருடங்களில் காங்கிரஸ் மகா சபையில் இருந்தார். பட்டம், பதவி வேட்டை, பண ஆசை, சுயநலம், யதேச்சாதிகாரம் ஆகியவைகள் உருவெடுத்தாற் போன்றவர்களுக்கு, தேசீய இயக்கத்தில் இடமேது? காங்கிரஸைவிட்டு விலகினார். ஏகாதிபத்தியத்தின் பூட்ஸ் காலை நக்கிப் பிழைக்கும் வாழ்க்கையை மேற்கொண்டார், வெட்கமில்லாமல்.

1919-ம் வருடம் இந்திய அரசியல் திட்டத்தை வகுப்பதற்காக லண்டனில் நடந்த கூட்டு பார்லிமெண்ட் கமிட்டியில் ஏகாதிபத்தியத்திற்குச் சாதகமாக சேவை செய்தார். பின்னர், இந்தியர்களை ஏமாற்றுவதற்காக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அமைத்திருந்த ஒவ்வொரு கமிஷனிலும், வட்ட மேஜை மகாநாட்டிலும், ஏகாதிபத்தியத்தின் தாஸானு தாஸராக நடந்து கொண்டார். தேசீய இயக்கத்தை நசுக்கிவந்த வைஸ்ராயின் நிர்வாக சபையில் இரண்டு முறை அங்கத்தினராக இருந்து இந்தியாவில் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட உதவி புரிந்தார்......

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் குட்டையில் ஊறித் தடித்த மட்டையல்லவா? பொய்ப் பிரச்சாரம் செய்வது, பிரித்தாள்வது முதலிய ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளை அப்படியே கற்றுக் கொண்டார்.

ஆலயங்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட்டு காந்தி பக்தராகவும், பாக்கிஸ்தானை எதிர்த்து காங்கிரஸ் பக்தராகவும் நடித்தார். முற்போக்கு திவான் என்று பலர் புகழையும் பெற்றார்.

ஆனால், உண்மையாகவே திரைக்குப் பின்னால் என்ன செய்து கொண்டிருந்தார்?

ஈழவர்களையும், நாயர்களையும், ஹிந்துக்களையும், கிருஸ்தவர்களையும், சமீபத்தில் முஸ்லிம்களையும், மற்ற சமூகத்தினரையும் பிரித்துவந்தார். கம்யூனிஸ்ட் பூச்சாண்டியைக்காட்டி,

தேசீய இயக்கத்தையும்—தொழிலாளர், விவசாயிகள் இயக்கத்தையும்பிரித்து யதேச்சாதிகார ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார். திருவாங்கூரை தொழில் மயமாக்கினேன் என்று கூறி திருவாங்கூரில் சர்வதேச முதலாளிகளுக்கு ஏராளமாக மூலதனத்தைப்போட்டு திருவாங்கூரைச் சுரண்டிக் கொழுக்க இடமளித்தார்.

இதுமட்டுமல்லாமல் உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டியது தர்மமல்லவா? 1948-ம் வருடத்தில் ஜூன் மாதத்தில் தனது எஜமானை பிரிட்டிஷ் இந்தியாவைவிட்டு இந்தியர்கள் வெளியேற்றினால், அவருக்கு அபயம் கொடுக்க வேண்டாமா? எஜமானுக்குத் துரோகம் செய்வது தர்மமா?

ஒரு புறத்திலே, நம்மை நெடுநாட்களாக அடிமைப்படுத்தி வரும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நாம் வெளியேற்றிக் கொண்டிருக்கும்பொழுது திருவாங்கூரில் என்ன நடக்கிறது?

ஏற்கனவே, திருவாங்கூரில் வெளிநாட்டு வெள்ளை முதலாளிகள் திருவாங்கூரைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளை முதலாளிகளுக்கு மேலும் இடமளிக்க முயற்சிசெய்கிறார். உதாரணமாக,

● ஏற்கனவே லண்டனில் ஒரு டிரேட் (வியாபார) கமிஷனரை நியமித்திருக்கிறது திருவாங்கூர் சமஸ்தானம்.

● ஆதிக்கவேட்டைக்காக, அணுகுண்டை உபயோகிக்க முயற்சிசெய்யும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முதலாளிகளுக்கு, அணுசக்தியை உற்பத்திசெய்வதற்கு அவசியமான 'தோரியம்' என்ற மூலப் பொருளைக் கொடுக்க ஒப்பந்தம் செய்திருக்கிறது திருவாங்கூர் சர்க்கார்.

இதன் அர்த்தமென்ன? திருவாங்கூரில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறார் திவான்.

1948-ம் வருடம் ஜூன் மாதத்தில் பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறினால், இந்தியாவிலுள்ள 584 சமஸ்தானங்களில் தங்கியிருக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் திட்டம் போட்டிருக்கிறது. திருவாங்கூரில் திவான் என்ன செய்கிறார்?

மார்ச் மாதம் 25-ந் தேதியன்று திருவாங்கூர் சுதந்திர நாடாக இருக்கும் என்று பிரகடனம் செய்தபொழுது, அன்னிய நாடுகளோடும் ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ளப்போவதாகக் கூறினார் திவான்.

உண்மையாகவே அவருடைய அந்தரங்க நோக்கமென்ன? திருவாங்கூரை, பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் ராணுவ தளமாக மாற்றப்போகிறார்கள்.

எந்த நாடும் சுதேச சமஸ்தானங்களின் சுதந்திரத்தை அங்கீகரிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அதை நட்புக்கு விரோத

மான செயலாகக் கருதுவோம் என்று நேருஜீ எச்சரிக்கை செய்யும்பொழுது, அதற்கு நேர்மாருக திருவாங்கூர் திவான் நடந்து கொள்கிருர். சமஸ்தானங்கள் சுதந்திரப் பிரகடனம் செய்வது, யுத்தப் பிரகடனம் செய்வதற்குச் சமம் என்று காந்திஜீ பகிரங்கமாகக் கூறிய பிறகுகூட, சுதந்திரப் பிரகடனத்தை வாபஸ் வாங்காததோடு, யுத்த முஸ்தீபுகளையும் செய்து வருகிருர். உதாரணமாக:

● திருவாங்கூர் கடற்கரையிலிருக்கிறது. ஒரு பெரிய கடற்படையை நிர்மாணிக்கப் போவதாகவும், அதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடப்பதாகவும், விரைவில் உடன்படிக்கை பூர்த்தியாகுமென்றும் திவான் கூறுகிருர்.

● "பூனுவில், டெஹுரோடிலுள்ள சென்ட்ரல் ஆர்ட்னன்ஸ் டிப்போவிலிருந்து, அவசரமாக 1000 லாரிகள் திருவாங்கூருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன...............டில்லியிலுள்ள ராணுவ தலைமை ஆபீசிலிருந்து டெலிபோன் மூலம் உத்தரவு போடப்பட்டதற்குத் தகுந்தபடி டிப்போ அதிகாரிகள் லாரிகளை அனுப்பியதாகத் தெரிகிறது" என்று "பிரீபிரஸ் ஜர்னல்" எழுதுகிறது. (1-7-47).

இந்த யுத்த முஸ்தீப்புகளெல்லாம் எதற்காக? சமஸ்தான மக்கள் மீது ஏற்கனவே போர் தொடுத்திருக்கிருர். தடை உத்தரவுகளும், தடியடியும், கைது செய்தலும் துப்பாக்கிப் பிரயோகமும் தலைவிரித்தாடுகின்றன. சமஸ்தான மக்கள் மீது மாத்திரமல்ல, சுதந்திர இந்தியாமீது யுத்தப் பிரகடனம் செய்திருக்கிருர்.........

கடந்த கால் நூற்றுண்டாகச் செய்துவந்த தேசத்துரோகப் பணிகளை, மேலும் தீவிரமாகச் செய்துவருகிருர். யதேச்சாதிகாரத்தை நிலைநாட்ட வேண்டும், ஏகாதிபத்தியங்களின் ராணுவ, பொருளாதார ஆதிக்கத்திற்கு இடமளிக்க வேண்டும்—இதுதான் அவருடைய அந்தரங்க நோக்கம்—திவானின் சுயசொரூபம்!

திருவாங்கூரில் நடப்பது நமது போராட்டம்

"தனது பிரிட்டிஷ் எஜமானர்களுக்கு, திருவாங்கூரை மாத்திரம் பாதகாணிக்கையாகக் கொடுப்பதற்கு திவான் சர் சி. பி. ராமஸ்வாமி ஐயர் போராடவில்லை. சுதந்திர இந்தியாவில் "சுதந்திரம்" பெற்று தனித்து வாழவேண்டுமென்று கேட்கிற "காஷ்மீர், போபால், ஹைதராபாத், இந்தூர்" முதலிய சமஸ்தானங்களையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அர்ப்பணம் செய்வதற்காகப் போராடுகிருர்....திருவாங்கூர் திவானின் யதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்காக பொதுஜன முகாம் இன்னும் ஒரு போராட்டத் திட்டத்தை வகுக்கவில்லை. நாம் ஒரு நாளை வீண்விரயமாகக் கடத்திஞல், அது பொதுஜன இயக்கத்தை நசுக்குவதற்கு ஆயத்தம் செய்ய திவானுக்குச் சாதகமாகவே இருக்கும். ஆகவே, சர்வ கட்சிகளும் ஐக்கிய முன்னணியை நிறுவி, போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இன்று இந்தியாவிலுள்ள பொதுமக்கள் அனைவரது ஆதரவைப் பெற்றிருக்கும் திருவாங்கூர் மக்கள் வெகு விரைவில் மகத்தான வெற்றியைப் பெறமுடியும்". என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் பொதுக்காரியதரிசி பி. ஸி. ஜோஷி சமீபத்தில் விடுத்த அறிக்கையில் குறிப்பிடுகிருர்.

யதேச்சாதிகார மன்னர்களை சமஸ்தான மக்கள் ஆதரிக்கவில்லை; அகில இந்தியாவும் எதிர்க்கிறது; ஆயினும்கூட, சுண்டைக்காய்களைப் போன்ற இந்தக் குட்டி ராஜாக்கள் துள்ளிக் குதிக்கிருர்கள்; யுத்த கோஷம் செய்கிருர்கள். இவர்களுக்கு எப்படி துணிச்சல் வந்தது?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அவர்களுக்கு பக்கபலமாக நிற்கிறது என்பது உண்மையே! ஆஞல், 1948-ம் வருடம் இந்தியாவைவிட்டு வெளியேறுகிருேம் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நமது ஒன்றுபட்ட சக்தி அலறச் செய்யவில்லையா? ஆகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆதரிப்பது மாத்திரம் அவர்களுக்கு இவ்வளவு நெஞ்சழுத்தத்தைக் கொடுக்கமுடியாது. அப்படியாஞல் வேறு காரணமென்ன?

யதேச்சாதிகார மன்னர்களோடு சமரசம் செய்து கொள்ளும் கொள்கையை நமது தேசியத் தலைமை பின்பற்றி வந்ததுதான் உண்மையாகவே இஸ்பேட் ராஜாக்களைத் தட்டிக்கொடுத்தது.

சமஸ்தான மக்களின் போராட்டத்தின் சரித்திரம் இதற்குச் சான்று கூறும்.

1938-ம் வருடத்தில் பல சமஸ்தான மக்கள் யதேச்சாதிகார முடிமன்னர்களை எதிர்த்துப் போராடிஞர்கள். 1938-ம் வருடம் ஹரிபுராவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில்,

"சமஸ்தானங்களிலுள்ள மக்களுக்கும், மற்ற பகுதிகளிலுள்ளவர்களைப்போல், சமூக, பொருளாதார, அரசியல் சுதந்திரம் பரிபூரணமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

இதுதான் காங்கிரசின் லட்சியம்" என்று கூறி, அதே சமயத்தில், "சமஸ்தானங்களுக்குள் நடக்கும் போராட்டத்தை காங்கிரசின் பெயரால் நடத்தக்கூடாது. சமஸ்தானங்களில் பிரத்தியேகமாக ஒரு ஸ்தாபனத்தை அமைத்து, அதன் தலைமையில் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் அர்த்தமென்ன? சமஸ்தான மக்களின் போராட்டத்திற்கு நேரடியாகத் தலைமை தாங்க மறுத்தது தேசியத் தலைமை!

1946-ம் வருடத்திற்குப் பிறகு அகில இந்தியாவில் நடந்த சுதந்திரப் போராட்டம் சமஸ்தானங்களிலும் ப்ரவிற்று. முதன் முதலில் "காஷ்மீரைவிட்டு வெளியேறு" என்று கோஷித்துக் கொண்டு காஷ்மீரச் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் தலைமையில் காஷ்மீர மக்கள் யதேச்சாதிகாரத்தை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

காஷ்மீர மக்களின் போராட்டத்தை முதலில் ஆதரித்த நேருஜீ, பின்பு கண்டிக்கத்துவங்கினர்.

"இந்த ராஜாக்களிலும், மஹாராஜாக்களிலும் சிலர் பழங்காலத்து ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள். சரித்திரத்தோடும், பரம்பரையோடும் நெருங்கிய தொடர்புள்ளவர்கள்......அவர்களை நாம் நேச மனப்பான்மையோடு அணுக வேண்டும். நம்முன் நிற்கும் மகத்தான கடமையைச் செய்துமுடிக்க அவர்களையும் உதவிபுரியும்படி அழைக்க வேண்டும்......" என்று நேருஜீ கூறினர்.

அகில இந்திய சமஸ்தான காங்கிரசின் ஜெனரல் கௌன்சில் கூட்டத்தில் "ராஜாக்களுக்கும், காங்கிரசுக்கும் இடையே இருந்த பிளவு மறைந்துவிட்டது. அவர்களோ அல்லது நாமோ கஷ்டப்படாத முறையில் மன்னர்களை நாம் இணங்க வைக்கவேண்டும்... காஷ்மீர் போராட்டம் சம்பந்தப்பட்டவரையிலும், தேசீய இந்தியாவுக்கு நேருவும், மஹாராஜா சாஹிபும் ஒன்றுதான்" என்று கூறி காஷ்மீரத்தில் நடந்த மகத்தான போராட்டத்தை ஸர்தார் பட்டேல் வன்மையாகக் கண்டித்தார்.

ஸர்தார் பட்டேல் இவ்வாறு போராட்டத்தைக் கண்டித்த பிறகுதான், நேருஜீயைக் கைதுசெய்ய காஷ்மீர் மன்னனுக்குத் துணவு ஏற்பட்டது.

"துப்பாக்கிப் பிரயோகத்திற்கும், அடக்குமுறைக்கும் திவான் காக் பொறுப்பாளியல்ல; அவரைக் குறைகூறக் கூடாது. ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன் என்ற நிலையில் தனது கடமையைச் செய்தார், அவ்வளவுதான்!" என்று கொடிய அடக்குமுறையை ஆதரித்துப் பேசினர் கிருபளானி! (பிரீ பிரஸ் ஜர்னல்)

மேலும், காஷ்மீரத்தைவிட்டு வெளியேறு என்று கோருவது நியாயமல்ல. ஏனென்ருல், 50 லட்சம் ரூபாய்க்கு காஷ்மீரத்தை ஹரிசிங் விலேக்கு வாங்கினுர். பலாத்காரத்தின் மூலமாகவோ, துரோகச் செயல்மூலமாகவோ காஷ்மீரத்தை கைப்பற்றவில்லே.........காஷ்மீரத்தின் அரசர் காஷ்மீரத்தின் புதல்வர்.........இங்கிலாந்திலுள்ளவர்கள் தங்கள் ராஜாவை வெளியேறும்படி கோருகிருர்கள்? அவர்கள் உதாரணத்தைப் பின்பற்றுங்கள்'' என்று கிருபளானி ஹிதோபதேசம் செய்தார்.

"பம்பாய் கிராணிகள்'' பத்திரிகையில், முஹமத் ஏ. பட்டேலிடமிருந்து வந்த கடிதத்தை டி. எப். கராகா பின்வருமாறு மேற்கோள் கொடுக்கிருர்.

"காஷ்மீரத்தைவிட்டு வெளியேறு என்று கோரியது அர்த்தமற்றது, அநியாயமானது என்று ராஷ்டிரபதி பகிரங்கமாகப் பேசிய பின்பு ஸ்ரீமதி ஸுசேதா கிருபாளனிக்கு காஷ்மீர அரசனிடமிருந்து 25,000 ரூபாய் நன்கொடை கிடைத்தது. என்ற செய்தி வருகிறது. நாற்பது கோடி மக்களின் பிரதிநிதி இந்தப் பணமுடிப்பை எப்படி ஏற்றுக் கொண்டார் என்பது எனக்குப் புரியவேயில்லே. ஷேக் அப்துல்லாவின் முதுகிலும், மற்ற காஷ்மீரத்தின் தேசபக்தர்களது முதுகிலும் குத்திேைம் என்று கிருபளானி தம்பதிகள் உணரவில்லேயா?''

இது மட்டுமல்ல, சமஸ்தானங்களின் போராட்டத்தில் முன்னணியில் நின்ற கம்யூனிஸ்டுகளுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டது. அகில இந்திய சமஸ்தான காங்கிரசில் கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டுபோடும் அவகாசம் கிடையாதென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், பல சமஸ்தானங்களில் நடந்த போராட்டங்களே காங்கிரஸ் தலேமை கண்டிக்கத் துவங்கிற்று. பாரத்பூர் சமஸ்தானத்தில் அடக்குமுறை வலுத்தது. 1946ம் வருடம் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க ஹிந்துக்களும்—முஸ்லிம்களும் அனுமதி கோரியபொழுது, போராட்டத்தை ஆரம்பிக்கக்கூடாது என்று நேருஜீ கூறினுர்.

இந்திய தேசீய தலேமை இவ்வாறு மன்னர்களே ஆதரித்து வந்ததனுல், யதேச்சாதிகார முரட்டு ராஜாக்கள் திருவாங்கூர், ஹைதராபாத் முதலிய சமஸ்தானங்களில் பொதுஜனங்களே மிருகத்தனமாக நசுக்கினுர்கள்.

காங்கிரஸ் தலேமை சமரசப்போக்கை இத்துடன் நிறுத்தவில்லே. கொச்சி முதலிய சமஸ்தானங்களில் பொதுஜனங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்காமல் ஜனநாயகத்தைக் கேலி செய்யும் அரசியல் சீர்திருத்தத் திட்டங்களே அமுலுக்குக் கொண்டு வந்தபொழுது தேசீயத் தலேமை அவர்களே "முற்போக்காளர்கள், தேசபக்தர்கள்'' என்று ஏற்றிப் போற்றிற்று.

பின்னர், தேசீயத் தலேமை யதேச்சாதிகார மன்னர்களுக்கு மேலும் விட்டுக்கொடுத்தது. சில சமஸ்தானங்கள் அரசியல் சீர்

திருத்தத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கின்றன என்பது உண்மையே. ஆனால், வயது வந்தவர்கள் அனைவருக்கும் ஓட்டுப் போடும் உரிமையை வழங்கவில்லை. பெரும்பாலோர் பணமூட்டைகளாக இருக்கும் சட்டசபையிலிருந்து அரசியல் நிர்ணய சபைக்கு 50 சத விகிதம் பேர்களை யதேச்சாதிகார மன்னன் பொறுக்கி எடுப்பவர்களை அனுப்புவதென்றும் மன்னர்களோடு தேசியத் தலைமை உடன்படிக்கை செய்துகொண்டது.

இவ்வாறு சமரசக்கொள்கையைப் பின்பற்றுவதன் மூலமாக யதேச்சாதிகார மன்னர்கள் நியாயமாக நடந்துகொள்வார்கள், தங்களோடு ஒத்துழைப்பார்கள் என்று தேசியத் தலைமை நினைத்தது. ஆனால், யதேச்சாதிகார மன்னர்கள் இன்று யுத்தகோஷம் செய்வது, அந்தக் கொள்கை தவறானது, பத்தாம் பசலி நிலப் பிரபுத்துவ சமூகத்தின் சின்னங்களை வேரொடுகெல்லி எறிய வேண்டும் என்ற உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது.

திருவாங்கூரிலும் இதே கொள்கையைத் தான் தேசியத் தலைமையும், சமஸ்தான காங்கிரசும் பின்பற்றி வந்தன. "கம்யூனிஸ்டுகளின் கலாட்டா" என்று சென்ற வருடம் நடந்த பொறுப்பாட்சிப் போராட்டத்தை திவான் சர் சி. பி. அழைத்தான். "கம்யூனிஸ்டுகள் தலைமையில் நடக்கும் போராட்டத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தமே கிடையாது" என்று பட்டம் தாணுப்பிள்ளையைப் போன்றவர்கள் போராட்டத்தில் சேராமல் விலகி நின்றார்கள். அகில இந்திய தேசியத் தலைமையும் போராடும் சமஸ்தான மக்களை ஆதரிக்காமலிருந்தது. சென்ற வருடம் புன்னப்பிராவிலும், வயலாரிலும் நடந்த வீரப்போராட்டத்தைச் சகல கட்சிகளும், அகில இந்தியாவும் ஆதரித்திருந்தால், இன்று யுத்த கோஷம் செய்வதற்கு திவான் சர் சி. பி. ராமஸ்வாமி ஐயருக்கு ஒரு சந்தர்ப்பமே கிடைத்திருக்காது!............

இன்று புதிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. திவானின் யதேச்சாதிகாரத்தை சமஸ்தானத்திலுள்ள சகல கட்சிகளும், அகில இந்தியாவும் எதிர்க்கின்றன. ஆனால், சுதந்திரத்தைப் பிளவு படுத்துவதற்காக பழைய ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு வருகிறார் திவான் சர் சி.பி. ராமஸ்வாமி ஐயர். சோவியத் பூச்சாண்டியையும், கம்யூனிஸ்டு பூச்சாண்டியையும் காட்டி, ஏகாதிபத்தியங்களுக்காக யதேச்சாதிகாரத்தை நிலைநாட்டப் பார்க்கிறார். பட்டம் தாணுப்பிள்ளையைப் போன்ற வலதுசாரி தலைவர்கள் திவானின் சூழ்ச்சிக்குப் பலியாகி வருகிறார்கள். "கம்யூனிஸ்டுகளோடு ஒத்துழைக்க மாட்டோம்" என்று சமீபத்தில் பட்டம் தாணுப்பிள்ளை ஒரு அறிக்கையை விட்டார். திவான் விரும்புவதும் இதுதான். ஆனால், இது சுதந்திரப்பாதையல்ல.........

கடந்த ஒரு நூற்றண்டாக இந்த இஸ்பேட் ராஜாக்கள் ஏகாதிபத்தியத்தின் ஐந்தாம் படைகளாக இருந்தார்கள். பாதி இந்தியா சுதந்திரமடைந்த பின்பும், நமது சுதந்திரத்திற்கு உலை

வைக்கும் ஐந்தாம் படைகளாகத் திகழப்போகிருர்கள். இந்த ஐந்தாம்படை முகாமில் முன்னணியில் நிற்கிருர் திவான் சர் சி. பி. ஆகவே, திருவாங்கூர் போராட்டம், நமது போராட்டம். அகில இந்தியாவின் போராட்டம். திருவாங்கூர் போராட்டத்தை வெற்றிகாமாக நடத்த வேண்டுமாஞல், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுக்காரியதரிசி தோழர் பி. ஸி. ஜோஷி வகுத்திருக்கும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர சகல தேசபக்தர்களும் முன் வரவேண்டும். அதாவது:

துரிதமாகவும், வெற்றிகரமாகவும் போராட்டத்தை நடத்தி முடிப்பதற்காக கீழ்க்கண்ட செயல் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சமஸ்தான காங்கிரஸை கம்யூனிஸ்டு கட்சி நிர்ப்பந்திக்கும்.

திருவாங்கூருக்கு வெளியே சுதந்திர திருவாங்கூரின் சகல கட்சிகளையும் உட்கொண்ட இடைக்கால சர்க்காரை கள்ளிக்கோட்டையில், அல்லது சென்னையில் அமைக்கவேண்டும். இந்திய யூனியனுக்கு இந்த சர்க்கார் தங்கள் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும். திருவாங்கூர் போராட்டத்தை நடத்துவதற்காக, இந்த சர்க்கார் திருவாங்கூருக்கு வெளியேயுள்ள பகுதிகளில் பணவசூல் செய்வதோடு, பொதுஜன ஆதரவையும் திரட்ட வேண்டும்.

சர் சி. பி. யின் யதேச்சாதிகார ஆட்சியைப் பலஹீனப்படுத்துவதற்காக, அதன்மீது பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி நேரு சர்க்காருக்கு இந்த இடைக்கால சர்க்கார் யோசனை கூறும்.

திருவாங்கூருக்குள்ளே போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்காகவும், சகல ஜனப்பகுதிகளையும் போராட்டத்திற்கு ஆதரவாக ஒன்று திரட்டுவதற்காகவும், சர்வகட்சி செயல் கமிட்டியை அமைக்கும்படி கம்யூனிஸ்ட் கட்சி நிர்ப்பந்திக்கும்.

திருவாங்கூரில் போராட்டத்தைப் பின்வருமாறு நடத்த வேண்டும்:

- திருவாங்கூர் மக்கள் சகல தடை உத்திரவுகளையும் மீற வேண்டும்.

- தங்கள் சொந்த சகோதரிகளையும், சகோதரர்களையும் சுடாமல் பொதுஜனங்களோடு சமஸ்தானப் படைகள் சேர வேண்டும்.

- சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் வேலைநிறுத்தம் செய்ய வேண்டும். சர் சி. பி. யின் உத்திரவுகளை நிறைவேற்ற மறுக்க வேண்டும்.

- தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்யவேண்டும்.

● விவசாயிகள் உணவு தான்யங்களை எல்லாம் தாங்களாகவே திரட்டி, யாவருக்கும் வினியோகம் செய்யவேண்டும்.

● சர் சி. பி. யின் கூலிக்கு மாரடிப்பவர்களின் தாக்குதலிலிருந்து பொதுஜனங்களைப் பாதுகாப்பதற்காகவும், தற்காலிக சர்க்காரின் உத்திரவுகளை காரியாம்சத்தில் செய்து முடிப்பதற்காகவும், மாணவர்களையும், வாலிபர்களையும் தொண்டர் படையில் ஒன்று திரட்டவேண்டும்.

● அந்தந்த ஸ்தலங்களிலுள்ள செயல்கமிட்டிகள், பொது ஜன சர்க்காரின் ஸ்தலஸ்தாபனங்களாக வேலைசெய்யவேண்டும்.

தேசபக்தர்களே! திருவாங்கூரில் நடக்கும் போராட்டம் நமது போராட்டம். அகில இந்தியாவின் விடுதலைப் போராட்டம். ஆகவே, சர்வ கட்சி முன்னணியை நிறுவுங்கள். திருவாங்கூரையும், இந்தியாவையும், ஆசியாவையும் அடிமைப்படுத்தும் ராணுவதளமாக மாற்ற நினைக்கும் திருவாங்கூரில், யசேச்சாதிகாரத்தை வேரோடு கெல்லி எறிந்து அகில உலகத்தையும் விடுவிக்கும் சுதந்திரக்கொடியை நாட்டுவோமாக!

Janasakthi Publishing House Q. H. M S. 402
Printed at the Janasakthi Press, Madras. Q. H. M S. 374
Date of Printing: 17th July, 1947

திருவாங்கூர் சமஸ்தானம